# சம்மாந்துறை பிரதேச சபையின் 04வது சபையின் 24வது கூட்டறிக்கை 2020.02.11

சம்மாந்துறை பிரதேச சபையின் 04வது சபையின் 24வது அமர்வு 2020.02.11 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 9.30 மணிக்கு சம்மாந்துறை பிரதேச சபையின் சபா மண்டபத்தில் தேசிய கீதம் மற்றும் இறை சிந்தனையுடன் கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட் அவர்களின் தலைமையில் ஆரம்பமானது.

**சமூகமளித்த கௌரவ உறுப்பினர்கள்**

| | | | |
|---|---|---|---|
| 01. | ஜனாப்.ஏ.எம்.எம். நௌசாட் | கௌரவ தவிசாளர் | அ.இ.ம.கா |
| 02. | திரு.வீ.ஜெயச்சந்திரன் | கௌரவ உப தவிசாளர் | ஸ்ரீ.சு.க |
| 03. | ஜனாப்.ஐ.எல்.நஜீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 04. | ஜனாப்.எஸ்.எம்.எம்.முஸ்தபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 05. | ஜனாப்.ஏ.அச்சி முஹம்மட் | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 06. | திருமதி.ஆர்.வளர்மதி | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 07. | திரு.என்.கோவிந்த சாமி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 08. | ஜனாப்.ஏ.சி.முஹம்மட் சஹீல் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 09. | ஜனாப்.எம்.ரீ.பௌசுள்ளாஹ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 10. | ஜனாப்.ஏ.எம்.எம்.றியாஸ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 11. | ஜனாப்.ஏ.எல்.எம்.ஜிப்ரி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 12. | ஜனாப்.எஸ்.நளீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 13. | ஜனாப்.ஏ.யூசுப் லெவ்வை | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 14. | திருமதி.கே.எம்.இன்பவதி | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 15. | திருமதி.எம்.எஸ்.சரீபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 16. | திருமதி.எஸ்.எம்.சித்தி நிலுவ்பா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 17. | திருமதி.கே.எல்.சிஹாமா | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 18. | ஜனாப்.வை.பீ.எம்.முஸம்மில் | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |

**சமூகமளிக்காத கௌரவ உறுப்பினர்கள்**

| | | | |
|---|---|---|---|
| 1. | ஜனாப்.யூ.எல்.அஸ்வர் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 2. | ஜனாப்.ஐ.எல்.எம்.மாஹிர் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |

**சமூகமளித்த உத்தியோகத்தர்கள்**

| | | |
|---|---|---|
| 01. | ஜனாப்.எம்.ஏ.கே.முஹம்மட் | செயலாளர் |
| 02. | செல்வி.ஏ.பீ.ஏ.ஸஹானா | அலுவலக உதவியாளர் |

**கௌரவ தவிசாளர் ஏ.எம்.எம். நௌசாட்**
பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ராஹீம். எல்லாப்புகழும் இறைவனுக்கே, எல்லோரையும் 04வது சபையின் 24வது அமர்வுக்கு வரவேற்றவனாக,

இவ் அமர்வின் முதல் அம்சமாக கடந்த கூட்டறிக்கை சமர்ப்பித்தலும் அங்கீகாரம் பெறலும். இக் கூட்டறிக்கையில் ஏதாவது திருத்தங்கள் இல்லாவிடில் ஒருவர் ஆமோதிக்கலாம்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம். றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இக் கூட்டறிக்கையில் திருத்தங்கள் இல்லாவிட்டாலும் சொற் பிரயோகங்கள், எழுத்துப் பிழைகள் காணப்படுகின்றது. அவற்றை திருத்த வேண்டும்.

**தீர்மானம் - 04/24/01**
சென்ற மாதக் கூட்டறிக்கை கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ.பௌசுள்ளாஹ் |

கூட்டறிக்கை சுட்டிக்காட்டப்பட்ட திருத்தங்களோடு ஏற்றுக் கொள்வதற்கு சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இவ் ஊரில் 72வது சுதந்திர தினம் பல இடங்களில் நடைபெற்றது. வழமை போல் எல்லா நிறுவனங்களையும் இணைத்து செய்யும் முயற்சியில் எமக்கு வெற்றி காணாமல் போனதற்கு காரணம் இம்முறை அவரவர்கள் செய்யவதாக இருக்க வேண்டும் என்பதனால் நம்பிக்கையாளர் சபை வேறாகவும், மஜ்லிஸ் அஸ்ஷூரா வேறாகவும், ஏனைய அரச நிறுவனங்கள் தனித்தனியாகவும் நடாத்தியது. எமது சபையின் வைபவத்தில் எல்லா அங்கத்தவர்களும் பங்குபற்றாதது ஒரு குறையாகவே இருந்தது. ஏனென்றால் சபையினால் ஒழுங்குபடுத்தப்படும் தேசிய நிகழ்வுகளில் வேறு ஏதாவது பொறுப்புகள் இருந்தாலும் பங்குபற்ற வேண்டியது நமது ஒவ்வொருவரினதும் கடமை. சுதந்திர தின நிகழ்வு உரிய நேரத்திற்கு உரிய முறையில் நடைபெற்ற ஒரே ஒரு வைபவம் பிரதேச சபையினால் நடந்தது என்று கூறலாம். ஏனென்றால் சரியாக 8 மணிக்கு கொடி ஏற்றப்பட்டு தேசிய கீதம் இசைக்கப்பட்டு இறைவணக்கம், மர நடுகை, மரக் கன்று பகிர்வு என்பன சந்தோசமாக நடைபெற்றது. அத்துடன் எம்மோடு இணைந்து செயற்பட்ட பொது நிறுவனங்கள், சமூக அமைப்புக்கள் என்பவற்றால் ஏற்படுத்தப்பட்ட தேசிய கொடிகள் பகிர்வு என்பன நடைபெற்று பத்திரிகைகளில் வெளிவந்தது எமக்கு ஒரு பெருமை. ஆனால் இவ் வைபவங்களில் தயவு செய்து எல்லோரும் கலந்து சிறப்பிக்க வேண்டும் என்று பணிவான வேண்டுகோளை விடுத்தவனாக,

இவ் அரசாங்கத்தின் கிராமிய அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் சப்பிரிகம வேலைத் திட்டங்கள் பிரதேச சபைகளும் இணைந்து அதன் விபரங்களை பரிசீலித்து திருத்தங்களை செய்து அரசுக்கு அனுப்பப்பட்டு அவை மீண்டும் உத்தியோகபூர்வமாக நடைமுறைப்படுத்த பிரதேச செயலகத்திற்கு கட்டளை இடப்பட்டிருக்கின்றது. நேற்று நான் அம்பாரை அரச அதிபர், திட்டமிடல் பணிப்பாளர் அவர்களையும் சந்தித்த போது இம்முறையும் சகல வேலைத்திட்டங்களும் பிரதேச செயலகத்தினால்தான் நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்று கூறினார்கள். பிரதேச சபைகள் ஒத்தாசைகள் வழங்கி இவ் வேலைகள் எல்லாவற்றையும் மார்ச் மாத முடிவுக்குள் கொண்டு வந்தால் மாத்திரம் அப் பணம் எடுக்கக் கூடிய நிலவரம் இருக்கின்றது. எனவே ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று கேட்ட போது நான் அவர்களுக்கு சுட்டிக்காட்டியது என்னவென்றால் சென்ற முறையும் சம்மாந்துறை பிரதேச செயலகம் கம்பரெலிய திட்டத்தில் முதலிடம் எடுத்ததுக்கு முக்கிய காரணம் பிரதேச சபையின் ஒத்துழைப்பு ஆகும். எமக்கு அவ் வேலைத்திட்டத்தில் இருந்த ஒரே ஒரு பிரச்சினை சில இடங்களில் செயற்படுத்தும் போது இருந்த நடைமுறைச் சிக்கல்கள். இம் முறை அத் திட்டத்தை செயற்படுத்துவதற்கு முதல் பிரதேச சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் கையொப்பமிட்டால் மாத்திரம் ஆரம்பிக்கலாம் என்ற ஒரு கட்டுப்பாட்டை கொண்டு வந்திருக்கின்றோம்.

கௌரவ உறுப்பினர்கள் அனைவருக்கும் சப்பிரிகம பட்டியல் தரப்பட்டிருக்கின்றது. தங்களது பகுதிகளில் நடக்கின்ற வேலைகளை அவை ஆரம்பிக்கும் போது அவ் இடத்தில் பங்குபற்றி ஏதாவது பிரச்சினைகள் வருமானால் அதை எழுத்து மூலம் சபைக்கு அல்லது DS இற்கு அறிவிக்க வேண்டும்.

குறித்த வேலைத் திட்டங்கள் நாளை சமர்ப்பிக்கப்படுகின்றது. அதில் ஏதாவது தடைகள் மீண்டும் வருமானால் அதற்குரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு திடமாக இருக்கின்றேன். இதே நேரம் 2

கிழமைகளாக எமது மட்டக்களப்புதரவை வட்டாரத்தில் உதய புரம் பிரதேசத்தில் பொது மைதானம், சவக்காலை, சபைக்கு சொந்தமான ஆரம்பத்தில் லொன்றியாக இருந்தவைகளில் சில பிரச்சினைகள் எழுந்தது. டெங்கு பிரச்சினையால் தண்ணீர் தேங்கும் இடங்கள் எல்லாம் சுத்திகரிக்கப்பட வேண்டும் என்று அப் பிரதேசம் துப்பரவாக்கப்பட்டு பின்னர் அவ் இடத்தை வேறு ஆக்கிரமிப்புகள் நடக்கலாம் என்று எல்லை இடுமாறு பணித்திருந்தேன். அதில் சில பிணக்குகள் உருவாகியது. அப் பிணக்குகளில் கௌரவ உப தவிசாளர் அவர்களும் என்னுடன் பேசினார். அவ் எல்லை சபைக்கு சொந்தமான இடமாக இருந்ததாலும் எதிர்காலத்தில் பிரச்சினையாக வரக்கூடாது என்று அவ் எல்லை இடப்பட்டு இருக்கின்றது. அதே வேளை பொது மைதானம் வெவ்வேறு பாவனைகளுக்காக எவ்வித அனுமதி இல்லாமலும் சவக்காலைக்குள் நெல் காயவைக்கின்ற நிலவரமும் இருக்கின்றது. சில எல்லைக் கல்லை நாட்டும் போது அப் பாதையை மறித்து நாட்டப்பட்டுள்ளது. ஆனால் அது தவறு. அது உடனடியாக அகற்றப்பட்டது.

இவை அனைத்தும் அரச காணிகள் ஆகும். DS தலைமையில் சென்ற 7ம் திகதி பொது, அமைப்புகள், Surveyor Department, பிரதேச சபை எல்லோரும் சேர்ந்து ஒரு கலந்துரையாடல் செய்து ஒரு இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது. உத்தியோகபூர்வமாக Surveyor Department ஆல் படம் வரையப்பட்டு நமக்கு அறிவிக்கப்பட்டதும் அதை பரிசீலித்து அதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். ஏனென்றால் சவக்காலையாக எந்த எல்லை காட்டப்படுகின்றதோ அவ் எல்லையும் பிரதேச சபையின் சொத்தாக வரும். கோயிலுக்கோ மக்களுக்கோ வெஸ்ட் பண்ண இயலாது சபைக்குதான் தர வேண்டும். இவ்வாறு வருகின்ற போது அதற்கு எல்லையை குறிப்பிட்டு ஒரு பராமரிப்பிற்குள் கொண்டுவர வேண்டியது எமது கடமை. இவ் ஊரின் சொத்தை பாதுகாப்பது உங்கள் மூலமாக எனது கடமை. உங்களது உத்தரவு இல்லாமல் தவிசாளர் பொதுச் சொத்துக்கள் விடயத்தில் எந்தவொரு தனி முடிவும் எடுக்க முடியாது. இவ் விடயங்கள் தொடர்பாக கௌரவ உறுப்பினர்களின் கருத்துகள் ஏதாவது இருந்தால் கூறலாம்.

**கௌரவ உறுப்பினர் என். கோவிந்தசாமி அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சென்ற 4ம் திகதி சுதந்திர தின கொண்டாட்டத்திலே கூடுதலான பிரதேச சபை உறுப்பினர்கள் கலந்து கொள்ளவில்லை என்ற ஒரு குறைபாட்டை கூறினீர்கள். ஆனால் பிரதேச செயலகத்தில் உள்ள கிராம உத்தியோகத்தர்களுக்கு பிரதேச செயலாளர் அவர்கள் உங்களது காரியாலயத்திலேயே கொடியேற்றத்தை செய்ய வேண்டும் என்றும் அதில் அரசியல்வாதிகளை கலந்து கொள்ளச் செய்ய வேண்டும் என்றும் பணிப்புரை விடுத்திருந்தார். அதற்கமைய 4 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் உள்ள காரியாலயங்களில் நடைபெற்றது. எனவே எதிர்காலங்களில் நாம் சுதந்திர தின கொண்டாட்டமோ அல்லது வேறு நிகழ்வுகளோ செய்யும் போது பிரதேச செயலத்துடன் தொடர்பு கொண்டு செய்தால் இதில் இழுபறி இருக்காது என்று நினைக்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இப் பிரதேச சபை சகல பொது நிகழ்வுகளிலும் எல்லோரையும் சேர்த்துதான் திட்டமிடுவது. ஆனால் இம்முறை எல்லோரும் தனித்தனியே செய்யவேண்டும் என்ற நிலை. ஆனால் பிரதேச சபை உறுப்பினர்களது வட்டாரங்களில் நடக்கும் நிகழ்வுகளில் நீங்கள் பங்குபற்றுவதில் எந்தப் பிரச்சினைகளும் இல்லை. ஆனால் முன் அறிவித்தலை செய்திருக்க வேண்டும். கௌரவ உறுப்பினர் இன்பவதி அவர்கள் மல்வத்தை அலுவலகத்தில் கொடியேற்றுகின்றோம் என்று கூறினார். கௌரவ உறுப்பினர்களுக்கு சபைக்கு என்று ஒரு பொறுப்பு இருக்கின்றது. சுகவீனம் வரலாம் அல்லது வேறு பிரச்சினைகள் இருக்கலாம். எல்லோருக்கும் எல்லா நேரமும் வர முடியாமல் இருக்கலாம். ஆனால் அறியத்தர வேண்டும் என்பதுதான் நான் கூறியதற்கு காரணம் ஆகும்.

**கௌரவ உப தவிசாளர் வீ. ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, தற்பொழுது LDSP வேலைத் திட்டங்களுக்கான மதிப்பீட்டறிக்கைகள் செய்யப்பட்டு முதல் கட்டமாக ஒரு தொகை நிதிகளும் உள்ளூராட்சி

மன்றங்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது. இரண்டாம் கட்டமானது மதிப்பீட்டறிக்கை செய்து அவ் வேலைத் திட்டங்களை நாங்கள் விலைமனு கோரி நடைமுறைப்படுத்த வேண்டும். அதற்கான திட்டங்களை தயாரிப்பது சபையினதும், அப் பிரதேசத்தை சேர்ந்த மக்களும் ஒன்று கூடி எமது அப்துல் மஜீட் மண்டபத்திலே முன்மொழிவுகளை தயாரித்தோம். தற்போது முதலாம் கட்டமாக சபையின் Lift இயந்திரத்தினையும், இரண்டாம் கட்டமாக வீரமுனை சிறுவர் பூங்கா வேலைத்திட்டங்களையும் செயற்படுத்துவதற்கு ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கின்றோம். இச் செயற்பாட்டின் போது அதிகாரிகளின் நடவடிக்கைகளானது இவ் வேலைத்திட்டங்களுக்கு ஒத்துழைப்புகள், ஆலோசனைகள் வழங்குவதே ஆகும். ஆனால் அவர்களின் ஆலோசனை என்பது அவர்கள் எம்மை கட்டுப்படுத்தும் செயற்பாடாக அமையக் கூடாது என்பதே எனது நிலைப்பாடு. ஏனெனில் மக்கள் பிரதிநிதிகளாக தெரிவு செய்யப்பட்டுள்ள நாம் மக்களின் என்ன தேவை, அதனை எவ்வாறு கொடுக்க வேண்டும் என்பது பற்றியே சிந்தித்துக் கொண்டிருக்கின்றோம்.

அது மாத்திரமல்லாமல் அதிகாரிகளுக்கு அப் பிரதேசங்களின் குடியியல் நிலமை, அம் மக்களின் வாழ்க்கை முறைமை, அங்கு கட்டியெழுப்ப வேண்டிய தேவை என்பது பற்றி தெளிவாக விளங்கும். ஆனால் அதிகாரிகள் வெளியில் இருந்து தங்கள் கருத்தை நிலைநாட்ட வருவது ஏற்றுக் கொள்ள முடியாது. இவ் இடத்தில் எதை எதிர்பார்க்கின்றோமோ அதற்கு தேவையான தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்குவதுதான் இவ் அதிகாரிகளின் பொறுப்பு. அதனை அவர்கள் வழிநடத்துவது எமக்கு சிறப்பாக இருக்கும் என்று இச் சந்தர்ப்பத்திலே கூற விரும்புகின்றேன். விசேடமாக வீரமுனை பிரதேசத்திலே அமைக்கப்பட்டுள்ள சிறுவர் பூங்காவிற்கு மதிப்பீட்டறிக்கையில் பிழைகள் இருப்பதாக கூறினீர்கள். அதனை மாற்றியமைக்க என்ன ஆலோசனை வழங்க வேண்டும், அதனை எவ்வாறு செய்ய வேண்டும் என்பதுதான் அவர்களால் வழங்கப்பட வேண்டிய ஆலோசனைகள் ஆகும். அதை விடுத்து நாம் எமது திட்டத்தை முற்று முழுதாக மாற்றியமைக்கும் செயற்பாட்டை தருவார்களானால் நிச்சயமாக அதை எம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது.

சம்மாந்துறை பிரதேசத்தை பொருத்தவரையில் 51 கிராம சேவகர் பிரிவுகள் இருக்கின்றது. அதில் விசேடமாக 10 வட்டாரங்கள் இருக்கின்றது. எமது அபிப்பிராயம் என்னவென்றால் இப் 10 வட்டாரங்களுக்கும் ஏதாவது ஒரு வேலைத்திட்டத்தையாவது முன்னெடுத்துச் செல்ல வேண்டும். இச் சூழலிலே நாம் ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவிற்கும் வேலை செய்ய வேண்டுமானால் 51 பிரிவிற்கும் வேலை செய்ய வேண்டும். இது எந்த அளவுக்கு சாத்தியம் என்று எம்மால் பார்க்க முடியாது. எனவே அதை தவிர்த்து குறைந்தது முதலாம் கட்டமாக 10 வட்டாரங்களுக்கும் ஏதாவது ஒரு வேலையை முன் நிறுத்திவிட்டு அடுத்த கட்டமாக அத்தியாவசிய தேவைகள் எங்கு இருக்கின்றதோ எமது சபையை வளப்படுத்த சபையின் ஊடாக என்ன சேவை வழங்க முடியுமோ அவ் வேலைத் திட்டங்களை முன்மொழிந்துள்ளோம். இம் முன்மொழிவுகளில் மாற்றங்கள் கொண்டு வரா வண்ணம் அதற்கான தொழில்நுட்ப ஆலோசனை வழங்குவதற்கு உத்தியோகத்தர்களை பணிக்குமாறு தயவுடன் இச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கின்றேன்.

இரண்டாவதாக கௌரவ தவிசாளர் அவர்கள் உதயபுரம் தமிழ்பிரிவில் விளையாட்டு மைதானம், மயானம் அதனோடு இணைந்த காணிப் பிரச்சினை தொடர்பாக கூறினார்கள். இது கடந்த 7ம் திகதி ஒரு கூட்டம் நடாத்தப்பட்டு எவ்வித அரசியல் தலையீடுகள் இல்லாமல் முடிக்கப்பட்டுள்ளதாக கேள்விப்பட்டுள்ளேன். நாம் அதிலே தொடர்ந்து இறுதியாக கூறிய விடயம் என்னவென்றால் மைதானத்திற்காக ஒரு பகுதி நிலத்தை தருவதாகவும், மயானத்தோடு சேர்ந்ததாகவும் அதனைச் சுற்றி வீதி அமைத்துக் கொள்வதாகவும், உடன்பாட்டை ஈட்டியதாகவும் கேள்விப்பட்டேன். அவை சுமூகமாக முடிந்ததை இட்டு மகிழ்ச்சியடைகின்றேன். இதற்கு மேலதிகமாக மைதான வீதியில் இருந்து உதயபுர கிராமத்திற்கு செல்லுவதற்காக ஒரு வீதி எல்லை போடுபட்டது. அவர்களுக்கு வழங்கப்பட்ட வீதி போதுமானதாக இல்லை. வீதி என்பது ஒரு அத்தியாவசியத் தேவை ஆகும். அவ் வீதியை பெருப்பித்து கொடுக்க வேண்டிய பொறுப்பு இருக்கின்றது. முடியுமானால் அவ் வீதியை 2 அடியாவது பெருப்பித்துக் கொடுத்தால் சிறப்பாக இருக்கும் என கருதுகின்றேன்.

செலவீனத்தில் மழை நீர் வடிச்சலை தடுப்பது என்ற தலைப்பின் கீழ் சம்மாந்துறை பிரதேச சபையினால் தொடுக்கப்பட்ட வழக்கில் ஆஜரான சட்டத்தரணிக்கான கொடுப்பனவு 3வது அமர்வு

ரூபா 45000 என்று கொடுக்கப்பட்டுள்ளது. அது ஒரு அமர்வுக்கான செலவா? அல்லது எல்லா வழக்கிற்கான செலவா? என்பதை தெளிவுபடுத்துமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அது 3 அமர்வுகளுக்கான செலவு ஆகும்.

**கௌரவ உறுப்பினர் ஏ. அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, அவ் வழக்கில் உண்மையாக எமது சபையை பிழையாக இனங்கண்டிருப்பதால் இவ் வழக்கிற்கு வழங்கப்பட்ட செலவை அவர்களிடம் இருந்து பெறுவதற்கு ஆவண செய்ய வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நீதிச் செலவுகள் எந்த சபைக்கும் இருக்கின்ற ஒரு பெரிய சவால். ஏனென்றால் அது எமது கையில் இல்லை. நாம் கொந்தராத்து பேசவும் இயலாது. அது வழக்கிற்கு ஏற்றது போல்தான் வரும். சில நேரம் நாம் அறவிடுகின்ற பணத்திலும் பார்க்க செலவு அதிகமாக வரும். ஆனால் அவ்வாறு செய்யாவிட்டால் ஏன் முயற்சி செய்யவில்லை என்று Audit Query ஆக வரும். நிச்சயமாக இவ் விடயத்தில் எமக்கு சாதகமாக வருகின்ற போது அச் செலவு எமக்கு தர வேண்டும் என்று கேட்பது எமது கடமை.

**தீர்மானம் - 04/24/02**
சென்ற மாதம் 2020.01.01 தொடக்கம் 2020.01.31 வரையிலான செலவீனங்களும் மற்றும் கொடுப்பனவுகளுக்குமான செலவு விபரங்களுக்கு அனுமதி வழங்குவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.அச்சி முஹம்மட் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் ஏ. அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, பிரதேச சபையில் முதல் இருந்த கௌரவ தவிசாளர்கள் எவ்வித அனுமதியும் பெறாமல் பெறுமதி வாய்ந்த கட்டடத்தை கட்டி அது சபைக்கு சொந்தமா? அல்லது தனியாருக்கு சொந்தமா? என்று தெரியாது. சபையால் ஒரு கட்டடம் கட்டுவது அல்லது வேலி அமைப்பது என்றால் கூட சபைதான் ஏனையவர்களுக்கு அனுமதி கொடுக்கின்றது. சபையே பிழையாக செய்யலாமா? நாம் இதை தடுக்காமல் விட்டோமானால் குற்றச் செயல் தொடருவதற்காக நாம் மறைமுகமான உதவியாளராக இருப்போம். அதுமட்டுமல்லாமல் மக்களிடம் ஒரு பிழையான எண்ணம் இருக்கின்றது. அதாவது கழிவுகளுக்கும், ஏனைய விடயங்களுக்கும் மாத்திரம் பிரதேச சபை என்று பிரதேச சபையின் சொத்து மக்களின் சொத்து என்ற சிந்தனையை உருவாக்க வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இவ் விடயத்தில் கௌரவ உறுப்பினர்கள் சமூக அமைப்புகளுக்கு பாரிய பங்களிப்பு இருக்கின்றது. நான் சந்தோசப்படுவது என்னவென்றால் சம்மாந்துறை பிரதேச சபை ஊழியர்களை பொறுத்தவரையில் ஒரு பொறுப்புணர்ச்சியுடன் அர்ப்பணிப்போடு செய்கின்றார்கள். தற்போது திண்மக் கழிவு அகற்றலில் 3வது லோட் எடுப்பதற்கு இயலாமல் இருக்கின்றது. ஆனால் எமக்கு அதை நடைமுறைப்படுத்துவதில் சகல உறுப்பினர்களும், சமூக அமைப்புகளும் பங்காளிகளாக வருகின்ற போது அச் சமூக அழுத்தம் அதை துரிதப்படுத்தும். ஆனால் அதை செய்வதில்லை. இப் பங்களிப்புகள் சமூகத்திடம் இருந்து வர வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் செயற்படுத்த இயலாது. உங்கள் எல்லோருக்கும் தெரியும் சட்டவிரோதமான கட்டுமானங்கள் வடிகான்களில் வைத்து கட்டப்படுகின்றது. எவராவது அதற்கு நடவடிக்கை எடுக்கின்றோமா? இல்லை. ஒரு மதில் கட்ட வேண்டும் என்றால் அனுமதி எடுக்க வேண்டும். கௌரவ உப தவிசாளர் ஒரு விடயத்தை

கூறினார். அதற்கு நான் உடனே தொழில்நுட்ப உத்தியோகத்தர்களை அனுப்பி தடுக்க சொன்னேன். ஏனென்றால் நடவடிக்கை ஒழுங்காக இருக்க வேண்டும். அதே போல் எனக்கு அதிகாரம் தருவது நீங்கள்தான். அவ் அதிகாரத்தை செய்வதற்கு சபையில் மாத்திரம் கதைத்தால் காணாது. அச் செயற்பாடு கிராம மட்டத்திலும் இருக்க வேண்டும்.

நேற்று மார்க்கட்டில் சில்லரை வியாபாரத்திற்கு கொடுக்கப்பட்ட கடையில் Canteen ஆரம்பிக்கப்பட்டதாக ஒரு முறைப்பாடு ஒன்று வந்தது. அதை உடனே தடுத்து நிறுத்தச் சொன்னேன். ஏனென்றால் அவ்வாறு செய்வதானால் சபையில் அனுமதி எடுக்க வேண்டும். அக் கடை எந்தக் காரணத்திற்காக கொடுக்கப்பட்டதோ அக் காரணத்தை மாற்றுவதானால் சபை அங்கீகாரம் கொடுக்க வேண்டும்.

சனிக் கிழமைகளில் இருந்து சென்னல் கிராமத்திலும் கழிவகற்றல் சேவையை ஆரம்பித்துள்ளோம். ஆனால் மக்களிடம் ஆரம்பத்திலே உக்குகின்ற கழிவுகளை கொடுக்காமல் நிலப்பரப்பு இருக்கின்ற பிரதேசங்களில் அதனை Compost ஆக மாற்றுவதற்கு நாம் ஊக்குவிக்க வேண்டும்.

**கௌரவ உப தவிசாளர் வீ. ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நீங்கள் கூறிய கருத்து சிறப்பான கருத்து. ஆனால் என்னைப் பொறுத்தவரையில் உள்ளூராட்சி மன்றங்களின் யாப்பு விதியிலே குறை இருப்பதாகவே நான் கருதுகின்றேன். ஏனென்றால் ஒரு உள்ளூராட்சியை பொறுத்தவரையில் அதன் பூரண அதிகாரம் தவிசாளரையே சூழ்ந்து இருக்கின்றது. விசேடமாக நான் ஒரு சில சந்தர்ப்பங்களிலே சிந்தித்து இருக்கின்றேன். அதாவது இவ் உள்ளூராட்சி மன்றங்களுக்கு ஒவ்வொரு வட்டார பிரதிநிதிகள் என்று அவர்களை சபைக் கூட்டத்திற்கு அனுப்பி ஒவ்வொரு தீர்மானத்தை நிலைநிறுத்திவிட்டு பின்னர் அவர்கள் உறுப்பினர்களாக அப் பிரதேசத்திற்குள் கூட ஒரு வேலையை செய்விக்க முடியாத உறுப்பினர் என்றால் அவ் உறுப்பினர் பதவி தேவையில்லாத உறுப்பினர் பதவி ஆகும். அரசாங்கம் 8000 உறுப்பினர்களை தெரிவு செய்து அவர்களுக்கு மாதாந்த படிகளையும் கொடுத்துவிட்டு கூட்டத்திற்கு தீர்மானங்களை எடுத்து கை உயர்த்தி செல்லும் நபர்களாக மாத்திரம் வகிப்பதனால் உள்ளூராட்சி மன்றத்தின் உறுப்பினர்களுக்கு இருக்கும் அங்கீகாரம் என்ன என்பதுதான் எனது கோரிக்கை. விசேடமாக எமது பிரதேசத்தில் ஒரு தேவைக்கு வந்தால்கூட நாங்கள் ஒரு வேலையை பணிக்க முடியாத சிரமம் இருக்கின்றது. ஒரு சில உறுப்பினர்களை சில ஊழியர்களுக்கு தெரியாது. எனவே நாங்கள் எப்படி அவர்களை பணிப்பது. எனவே எப்படி உங்கள் அதிகாரத்தை பயன்படுத்தி இக் கடமைகளை செய்ய முடியுமோ அந்தளவுக்கு செய்தால் சிறப்பாக இருக்கும் என்று கருதுகின்றேன்.

ஏனென்றால் நான் பொதுவாக ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றங்களிலும் உறுப்பினர்களுக்கு இருக்கின்ற மரியாதைகளையும், நடைமுறைகளையும் பார்க்கின்ற போது அங்கு இருக்கும் அத்தனை உறுப்பினர்களும், ஊழியர்களும் கௌரவ மேயர் அல்லது கௌரவ தவிசாளர் அல்லது கௌரவ உப மேயர் அல்லது கௌரவ உப தவிசாளர் போன்றவர்கள் மாத்திரம்தான் எங்களுக்கு கட்டளை இட தகுதியானவர்கள். ஆனால் அவர்களுக்கும் எங்களுக்கும் தொடர்பு இல்லை என்ற நிலைதான் இவ் உள்ளூராட்சி மன்ற யாப்பு இருக்கின்றது. எனவே நான் மீண்டும் தெரிவிப்பது முடியுமான அளவு உங்கள் அதிகாரத்தை பயன்படுத்தி இவ் வேலைத்திட்டங்களை முன் நிறுத்த வேண்டும். இச் சபையிலே 20 உறுப்பினர்கள் இருக்கின்றார்கள். இச் சபைக்குட்பட்ட பொதுவாக செயற்படுத்தக்கூடிய கடமைகளை 20 ஆக பிரித்து எங்களையும் பயன்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தேன். அவ்வாறு செய்யும் பட்சத்தில் நாங்களும் ஒரு சில கடமைகளை மேற்பார்வை செய்வதாகவும், வேலை செய்யும் உறுப்பினர்களாக மாறவும் சந்தர்ப்பம் ஏற்படும். எனவே இவ் உள்ளூராட்சி மன்ற சட்டத்தின் படி இருக்கின்ற வேலைத்திட்டங்களை செய்வதற்கு கௌரவ தவிசாளருக்குதான் பூரண அதிகாரம் இருக்கின்றது. நாங்கள் கை உயர்த்தும் நபர்கள் மாத்திரமே என்று தெரிவித்து நிறைவு செய்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உப தவிசாளரின் கருத்தை உடன்பட்டுக் கொண்டு, இதில் உள்ள பெரிய பிரச்சினை சட்டம். இச் சட்டத்தில் கூறப்படுவது என்னவென்றால் முழு நிறைவேற்று அதிகாரமும் தவிசாளருக்கு இருக்கின்றது. ஆனால் சகல நடவடிக்கைகளுக்கும் சபையின் அங்கீகாரம் பெற வேண்டும். கை உயர்த்துவது அங்கீகாரம் வழங்குவதற்கு ஆகும். நீங்கள் உடன்படுவது அடிமைகளாக அல்ல உரிமையோடு இதற்கு நாங்கள் அங்கீகரிக்கின்றோம் என்று. கௌரவ உறுப்பினர்கள் அங்கீகாரம் வழங்காவிட்டால் அது நடக்காது. சபையில் ஒரு தீர்மானம் எடுத்து அது அங்கீகரிக்கப்பட்டு அதை நிறைவேற்றும் அதிகாரம் தவிசாளருக்கு உண்டு.

அவ் அதிகாரத்தை சட்டத்தின் படி தவிசாளர், உப தவிசாளர், செயலாளர் அல்லது வேறு ஏதும் உத்தியோகத்தர் என்றுதான் இருக்கின்றது. ஆனால் வேறு உத்தியோகத்தர் அல்லது உறுப்பினர் என்றால் உறுப்பினர்களுக்கும் வழங்கலாம். அதில் மிகவும் தெளிவாக இருக்கின்ற பிரச்சினை என்னவென்றால் இன்னுமொரு உத்தியோகத்தரே தவிர உறுப்பினர்களுக்கு கொடுக்கலாம் என்று சட்டத்தில் இல்லை. அதிகாரத்தை பாவிக்கின்ற முறையில்தான் சிக்கல் வருகின்றது. ஒரு இடத்தில் தவிசாளரின் நிறைவேற்று அதிகாரத்தை ஒரு கௌரவ உறுப்பினர் பாவிக்கலாம் எப்படியென்றால் தவிசாளரின் இடத்தில் இருந்து எல்லாவற்றையும் உள்வாங்கி தீர்ப்பு எடுப்பது இயலாமல் இருக்கின்றது. தீர்ப்பு எடுக்க வேண்டியது சபை. கௌரவ உப தவிசாளருக்கு இது வரைக்கும் சட்டபூர்வமாக நிறைவேற்று அதிகாரத்தை எழுத்து மூலம் வழங்காததற்கு காரணம் அவர் ஒரு அரச உத்தியோகத்தர் ஆவார்.

**கௌரவ உறுப்பினர் எஸ். நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, குறிப்பாக கடந்த சபையிலே எடுக்கப்பட்ட முடிவு மிக முக்கியமாக மாடு அறுக்கின்ற மடுவத்திற்கு இரகசிய கமரா பொருத்துவது, அதனை சுத்தம் செய்வது, அதனோடு சம்மந்தப்பட்ட இறைச்சிக்கடைக்காரர்களையும் அழைத்து அவர்களிடம் முடிவு எடுப்பதாகவும் எடுக்கப்பட்டது. இறைச்சிக் கடைகளுக்கு இலத்திரனியல் தராசு வழங்குவதாகவும் முடிவு எடுக்கப்பட்டது. ஆனால் இவ் விடயங்கள் எதுவும் நடைபெறவில்லை.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இறைச்சிக்கடை உரிமையாளர்களுக்கான கூட்டம் நடாத்தப்பட்டது. ஆனால் எல்லா உறுப்பினர்களும் இணைந்து கூட்டம் நடாத்துவது என்பது சாத்தியமாக இருக்காது. அப்படியானால் உறுப்பினர்களுக்குள் குழு ஒன்றை உருவாக்கி மீண்டும் அக் கூட்டத்தை ஏற்பாடு செய்வதற்கு செயலாளருக்கு பணிக்கின்றேன். மடுவத்தை எவரும் சென்று பார்க்கலாம் துப்பரவு செய்யப்பட்டு இருக்கின்றது. தராசு சபையால் கொடுத்தால் பராமரிக்கமாட்டார்கள் என்பதற்காக அவர்களின் பங்களிப்புடன் மாதாந்தம் அறவவிட வேண்டும்.

## தீர்மானம் - 04/24/03
அலுவலக Fax இயந்திரம் திருத்தத்திற்காக உரிய நிறுவனத்திற்கு அனுப்பிய போது அதன் திருத்தச் செலவு ரூபா 30756.24 இருப்பினும் புதிய Fax இயந்திரம் ரூபா 32184.00 ஆகும். எனவே புதிய Fax இயந்திரம் ஒன்று கொள்வனவு செய்வதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.நளீம் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

## தீர்மானம் - 04/24/04
திண்மக் கழிவு வகைப்படுத்தல் பிரசார நடவடிக்கையின் போது விநியோகிக்க 500 பிளாஸ்ரிக் தொட்டிகள் கொள்வனவு செய்வதற்கான பிரேரணை.

பிரேரித்தவர் : கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட்
ஆமோதித்தவர் : கௌரவ உறுப்பினர் ஏ.எல்.எம்.ஜிப்ரி

இப் பிரேரணை சபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் எஸ். நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, திண்மக் கழிவு என்று வருகின்ற போது அது தொடர்பாக 3வது தடவையும் இயந்திரத்தினை அனுப்ப இயலாமல் இருக்கின்றது என்று கூறினீர்கள். உண்மையிலே இதற்கு காரணம் இயந்திரங்கள் போதாது. எந்த ஊழியரையும் குறை கூறுவதாக இல்லை. குறைந்த பட்சம் எமது உழவு இயந்திரம் குப்பை கொட்டுகின்ற இடத்திற்கு சென்று வருவதற்கு 3 மணித்தியாலயம் தேவைப்படுகின்றது. இதனால் அவ் ஊழியர்களுக்கான வேலை போதுமானதாக இல்லை. உதாரணமாக காலையில் அவர்கள் 6 மணிக்கு வேலை ஆரம்பித்தால் 1 மணித்தியாலயம்தான் வேலை செய்கிறார்கள். அதில் இருந்து அவ் இயந்திரம் சென்று வரும் வரைக்கும் சுமார் 3 மணித்தியாலயம் வீதிகளில் காணக்கூடியதாக இருக்கின்றது.

நாம் இது தொடர்பாக தீர்க்கதரிசனமான முடிவை எடுக்க வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் உழவு இயந்திரத்திற்கு பதிலாக வேறு வாகனத்தை பயன்படுத்தி அவர்களை வேலையில் அமர்த்த வேண்டும். அவர்களது 8 மணி நேர வேலையிலே 2 அல்லது 2 ½ மணித்தியாலயம்தான் வேலை செய்கின்றார்கள். ஆனால் அது அவர்களது பிழை இல்லை. எமது நடைமுறையில் இருக்கின்ற பிரச்சினை. கடந்த சபையிலே கௌரவ தவிசாளர் அவர்களின் அனுமதி ஒன்று கோரப்பட்டது. அதாவது வாகனங்களை தவணை முறையில் கொள்வனவு செய்வது என்று அவ்வாறு கொள்வனவு செய்யும் வாகனம் உழவு இயந்திரமாக அல்லாமல் Compactor அல்லது Dump Truck போன்ற வாகனங்களை கொள்வனவு செய்தால் இப் பிரச்சினைக்கு தீர்வைக் காணலாம் என்பது எனது ஆலோசனை ஆகும்.

**கௌரவ உறுப்பினர் ஏ. யூசுப் லெவ்வை அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இச் சந்தர்ப்பத்திலே பேசுவது சிறந்தது என்று நினைக்கின்றேன். எமது சம்மாந்துறை பிரதேசம் பாரிய நில அமைப்பைக் கொண்டது. திண்மக் கழிவகற்றல் என்பது சம்மாந்துறை பிரதேசத்திலே இருக்கின்ற பாரிய பிரச்சினையாக இருக்கின்றது என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம். தற்போது சபைக்கு இருக்கின்ற திண்மக் கழிவு அகற்றும் இயந்திரங்கள் ஊழியர்களைக் கொண்டு சிறப்பாக செயற்படுத்த வேண்டும் என்பதுதான் எமது எல்லோரது நோக்கமாக இருக்கின்றது. நான் முன்பும் சபையில் கூறியிருக்கின்றேன். எமது இயந்திரங்கள் தொழிலாளர்களின் அளவுகளுக்கு ஏற்ப சிறப்பான முறையில் கழிவுகளை அகற்றுவதற்கான ஒரு செயற்திட்டத்தை முன்னெடுக்க வேண்டும் என்று பேசி இருக்கின்றேன். அதற்கு மேலதிகமாக கழிவுகளை அகற்றக்கூடாது என்று கூறவில்லை. ஆனால் சென்னல் கிராமத்தில் இருக்கின்ற பிரதேசத்தின் பௌதீக நில அமைப்பு எவ்வாறு என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம். நகர்ப் பிரதேசங்களில் கழிவுகளினால் பொது மக்களுக்கு ஏற்படுகின்ற அசௌகரியத்தின் காரணமாக கழவகற்றுகின்ற நோக்கமே அதுதான்.

கழிவகற்றல் நகர்ப் பிரதேசங்களில் ஒரு கிழமையில் ஒரு தடவை மாத்திரம் செய்யப்படுகின்றது. சென்னல் கிராமம் என்பது இடவசதி கொண்ட பிரதேசம். எனவே அங்கு இருக்கின்ற குப்பைகளை அகற்றுவதற்கு அவர்களது பிரதேசங்களிலே குழிகளை தோண்டி சிறப்பான முறையில் அதை அகற்றிக் கொள்ள வாய்ப்பு இருக்கின்றது. ஆனால் நகர்ப் பிரதேசங்களிலே அவ்வாறு இல்லை. எனவே அவசியம் குறைந்த பிரதேசங்களிலே கழிவகற்றுகின்ற நடவடிக்கையை விரிவுபடுத்துவது, அவசியமான இடங்களில் கழவகற்றுகின்ற தேவைகளில் அசௌகரியங்களை ஏற்படுத்துவதும் சிறப்பான நடைமுறையாக இருக்காது. எனவே நகர்ப் பிரதேசங்களில் ஒரு கிழமையில் ஒரு தடவை கழிவகற்றும் வாகனங்களை அனுப்புவதை விட 2 தடவையோ அல்லது 3 தடவையோ எமது கட்டமைப்புக்கு ஏற்ற வகையில் அதை செய்து கொள்ள வேண்டும். என்பதை இச்

சந்தர்ப்பத்திலே கூறிக்கொள்ள விரும்புகின்றேன். இவ் விடயத்தில் கௌரவ தவிசாளர் அவர்கள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வது சிறப்பாக இருக்கும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

சென்னல் கிராமத்தை பொறுத்தவரையில் பல தடவைகள் கௌரவ உறுப்பினர் நளீம் அவர்கள் கூறியிருக்கின்றார். நாம் ஒரு குழு அமைத்து ஒரு ஆய்வு செய்து அவ் ஆய்வின் பின்னர் அப் பிரதேசத்திற்கு ஒரு கிழமையில் ஒரு நாள் அனுப்பி அவ் ஆய்வின் பிரகாரம் செய்யப்பட்டது. அதில் முன்பு பேசியது போல் அவசியமானவற்றை மற்றும் அகற்றுவதற்கு மக்களை ஊக்குவிக்க வேண்டும். எமக்கு இருக்கின்ற பாரிய சவால் வாகனங்கள் பற்றாக்குறை. பிரதேச சபைகளுக்கு பொதுவாக அசையா சொத்துக்கள் கொள்வனவு செய்வதற்கு எமக்கு வருமானம் போதாது. இக் கிழமை அரசாங்கத்தில் இருந்து ஒரு சுற்று நிரூபம் வந்திருக்கின்றது. அசையும் சொத்துக்கள் அதிலும் வாகனங்கள் பிரதேச சபைகளுக்கு அவசியத் தேவை என்பதால அனுமதியுடன் பெறலாம். எல்லா இடங்களிலும் இருக்கின்ற பிரச்சினை என்னவென்றால் இறுதியாக கொண்டு கொட்டுகின்ற இடம் ஆகும். சட்டபூர்வமாக செய்வதற்கு ஆலங்குளத்தை தவிர வேறு இடம் இல்லை. அவ் இடத்திற்கு சென்று வருவதற்கு இடையில் இவர்களை பயன்படுத்துவதற்கு மாற்றுவழி இல்லை. இது எல்லா சபைகளுக்கும் இருக்கின்ற பிரச்சினை ஆகும்.

**கௌரவ உப தவிசாளர் வீ. ஜெயச்சந்திரன் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, ஆலங்குளத்திற்கு தொடர்ந்து அனுப்புவதால் ஒரு கால விரயம்தான் இதற்கான காரணம். எனவே நாம் நாவிதன்வெளி பிரதேச சபையுடன் இணைந்து இரண்டுக்கும் பொதுவான இடம் ஒன்றை தெரிவு செய்து அதில் குப்பைகளை கொட்டினால் சிறப்பாக இருக்கும் என்று நினைக்கின்றேன். ஏனென்றால் நாவிதன்வெளி பிரதேச சபைக்கும் இப் பிரச்சினை தொடர்ந்து இருக்கின்றது. இது இரண்டுக்கும் ஏற்றது போல் வீரச்சோலை அண்டிய வனப்பகுதியை தெரிவு செய்து அதனை நாம் கழவகற்றும் இடமாக மாற்றுவோமானால் வருமானம் பெறக்கூடிய வகையிலே அதற்கான முதலீடுகளை செய்து செயற்படுத்தினால் சிறப்பாக இருக்கும். கௌரவ தவிசாளர் அவர்கள் கூறியது போல் இத் தொழிலை செய்பவர்களுக்கு கிடைக்கும் குறிப்பிட்ட நேரம் தான் அவர்களுக்கு விமர்சனம். ஆனால் இதற்கு தீர்வாக எமக்கு அண்டிய பிரதேசங்களில் கழிவு சேகரிக்கும் இடம் ஒன்றை அமைத்தால் சிறப்பாக இருக்கும் என கருதுகின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

தமிழ் கிராம எல்லைக்குள் இத் திண்மக் கழிவு முகாமைத்துவம் செய்வதில் மிருகக் கழிவு போடுவதில் சிக்கல் வருகின்றது. ஆனால் கௌரவ உப தவிசாளர் அவர்கள் கூறிய கருத்து நல்லது. நாம் அதனை ஆராய்ச்சி செய்வோம்.

**தீர்மானம் - 04/24/05**

சீருடை பெறத் தகுதியான ஊழியர்களுக்கு சீருடை பெற்றுக் கொடுப்பதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ.பௌசுள்ளாஹ் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

கௌரவ உறுப்பினர்களுக்கு தெரியும் உங்களின் அனுமதியுடன் எமது சபையின் 2ம் மாடியில் ஒரு மண்டபம் அமைத்திருக்கின்றோம். அதனை ஒரு வளமுள்ள ஒரு Resource Center ஆக மாற்றுவதுதான் இச் சபையின் எண்ணம். அதை உள்ளூராட்சி மன்றத்திற்கு மட்டும் அல்லது உள்ளூராட்சி மன்றங்களால் செய்யப்படுகின்ற செயற்திட்டங்களுக்காக செய்வதா? அல்லது வருமானம் பெறக்கூடிய இடமாக மாற்றுவதா? வருமானம் பெறக்கூடிய இடமாக மாற்றுவதானால் ஒரு நடைமுறைப் பிரச்சினை ஒன்று இருக்கின்றது. அதாவது அலுவலக நேரத்தில் ஏதாவது ஒரு நிகழ்வு செய்வது என்றால் வெளிநபர்கள் அலுவலகத்திற்குள் வருவார்கள். அது எமது

நடவடிக்கைகளுக்கு பாதுகாப்பு இல்லாமல் இருக்கும். அதே நேரம் விடுமுறை நாட்களில் கூட எமது அலுவலகத்தின் கட்டமைப்பில் பிரச்சினையாக வரலாம். உங்களது கருத்துக்களை கூறலாம்.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ். சரீபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, அவ் இடத்தை வருமானம் பெறக்கூடிய இடமாக பயன்படுத்தினால் சிறப்பாக இருக்கும். அலுவலக நேரம் தவிர்ந்த ஏனைய நேரங்கள் வழங்குவதாக இருந்தால் எமது காரியாலயங்களுக்குரிய பாதுகாப்பை கொடுத்துவிட்டு வழங்கலாம் என்பது எனது அபிப்பிராயம்.

**கௌரவ உப தவிசாளர் வீ. ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சம்மாந்துறையை பொறுத்தவரையில் ஒரு வள நிலையம் என்பது இல்லை. கருத்தரங்கு நடாத்தும் மண்டபமாக அல்லாமல் முக்கிய விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடக்கூடிய மண்டபமாக அமைத்தால் சிறப்பாக இருக்கும். அதற்கு குறிப்பிட்ட அளவு அறவீட்டை செய்யலாம். கருத்தரங்குகள் நடத்துவோமானால் அங்கு அவர்கள் சாப்பிட்டு விட்டு செல்வார்களானால் AC பூட்டப்பட்ட அம் மண்டபம் துர்நாற்றம் வீசும். எனவே அதை தவிர்த்து முக்கியமான விடயங்கள் சாதாரணமாக பொலிசாருடன் இணைந்து ஒரு விடயம் பேசுவதற்கு அல்லது அரச மந்திரிகள் பிரதேச மட்டத்திலே ஒரு கலந்துரையாடல் செய்வதற்கு இங்கு ஒரு மண்டபம் இல்லை. எனவே சம்மாந்துறையை பொறுத்தளவில் முற்றுமுழுதாக AC பூட்டப்பட்டு, முழுமையாக மறைக்கப்பட்ட ஒரு வள நிலையம் தேவை, அதற்காக இம் மண்டபத்தை ஒழுங்கு செய்வது சிறந்தது. கருத்தரங்குகள் நடாத்த வேண்டுமானால் ஜனாதிபதி விளையாட்டு கட்டிட தொகுதியில் அதற்கான மண்டபத்தை தயார் செய்து ஒரு தொகை அறவீடு செய்து நடாத்தினால் சிறப்பாக இருக்கும். அதற்கு மேலாக தனிப்பட்ட எந்தவொரு நிகழ்ச்சி நிரலுக்கு எமது மண்டபத்தினை வழங்குவது சிறப்பாக இருக்காது என நான் கருதுகின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இதே தீர்மானம் ஜனாதிபதி விளையாட்டு கட்டிடத் தொகுதிக்கு எடுத்திருக்கின்றோம். அங்கு சாப்பாடு, தங்கும் வசதி என்பவற்றுடன் ஒரு கருத்தரங்கு மண்டபம் என்பவற்றை தயார் செய்துள்ளோம். இதை கட்டுப்பாடுள்ளதாக செய்து கௌரவ அமைச்சர் ஒருவர் வந்து ஒரு கலந்துரையாடல் நடத்துவது என்றால் அதற்கு நாம் செய்யலாம். ஆனால் அரசியல் காரணங்களுக்காக பாவிக்காமல் எந்த உணவும் அதற்குள் பகிரக் கூடாது என்ற கட்டுப்பாடும் இருக்க வேண்டும். ஒரு வெளிநாட்டு தூதுக் குழு வந்தால் நாம் பெருமையாக நடாத்தக்கூடியதாக மாற்றுவதுதான் உகந்தது என நான் நினைக்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ. அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, உள்ளூராட்சிகள் தொடர்பான கலந்துரையாடல்களுக்கு ஏற்றது போல் Screen, Projector மற்றும் கற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்பையும் ஏற்படுத்த வேண்டும். எல்லா உள்ளூராட்சிகளுக்கும் முன்மாதிரியாக செய்ய வேண்டும். ஆசிரியர்களின் சில பயிற்சிப் பட்டறைகள் வெளிநாட்டு உதவிகளுடன் நடக்கின்றது. இப்படியான இடங்கள் இல்லாததனால் பெரிய Hotel வாடகை செலுத்தி நடாத்துகின்றார்கள். அப்படி அவர்கள் வந்தால் எமது கட்டுப்பாட்டை கூறி எமது ஊழியர்களின் வேலைகளுக்கு பாதிப்புகளை ஏற்படுத்தா வண்ணம் செய்ய வேண்டும்.

**கௌரவ உப தவிசாளர் வீ. ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நான் கூறிய கருத்தானது எந்தப் பயிற்சிகளுக்கும் வழங்குவது இல்லை. பயிற்சிப் பட்டறைகள் என்றால் அதற்கு ஜனாதிபதி விளையாட்டுக் கட்டிடத்தொகுதியை பயன்படுத்தலாம். விசேடமாக எமது பிரதேசத்தின் அபிவிருத்தி சார்ந்த கலந்துரையாடலுக்கும் எமது ஒன்று கூடலுக்குமான மண்டபமாக இருந்தால் போதுமானது என்பதுதான் எனது கருத்து ஆகும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

கலந்துரையாடலுக்கான Projecter, Screen, Sound System, AC போன்றன உள்ளது. கலந்துரையாடல் செய்யலாம் ஆனால் கட்டுப்பாடான அமைப்பாக இருக்க வேண்டும். நான் நினைக்கின்றேன் எமது சபை இப் பகுதிக்கு ஒரு முன்மாதரியாக இப்படி ஒரு அமைப்பு எந்த சபையிலும் இல்லை. நாம் பாவிக்கின்ற Sound Systerm இற்கு பெருமளவு நிதி செலவிடப்பட்டுள்ளது. நாம் வருவதற்கு முதல் செய்யப்பட்டது அதன் கௌரவம் செயலாளருக்கு போகும். ஏனென்றால் இப்படி செய்வது என்றால் உயர் மட்டத்திற்கு போக வேண்டும். எனவே நாம் இதை Resource Center ஆக கலந்துரையாடல்களுக்கு பயன்படுத்துவோம்.

**தீர்மானம் - 04/24/06**

அலுவலக 2ம் மாடி கேட்போர்கூட மேசை (Head Table), கதிரை, Sound System, A/C என்பன அமைத்தல் மற்றும் அதனை முக்கிய விடயங்களை கலந்துரையாடுவதற்கான Resource Centre ஆக பயன்படுத்துவதற்கும் அதன் வாடகை என்பவற்றுக்கான பிரேரணை.

உத்தேசமாக: 01 மணித்தியாலயம்

1. A/C உடன் - ரூபா 2000.00
2. Non A/C - ரூபா 1000.00

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உப தவிசாளர் | வீ.ஜெயச்சந்திரன் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/24/07**

பாத்திமா முன் பள்ளிப் பாடசாலையின் கூரைக்கு Under Sheet அடிப்பதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | கே.எல்.சிஹாமா |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சி.எம்.சஹீல் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

பாத்திமா பாலர் பாடசாலை அருகில் உள்ள இடத்தில் ஒரு Guest House மாதிரி செய்தால் நன்றாக இருக்கும் என்று நினைக்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எஸ். நளீம் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, நீங்கள் குறிப்பிட்ட விடயம் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் இஸ்மாயில் அவர்களுடன் நானும் சென்றிருந்தேன். அது எவ்வாறான திட்டம் என்றால் கிழக்கு மாகணத்தினுடைய ஆளுநர் MLA.ஹிஸ்புல்லாஹ் அவர்களுடைய கைவிடப்பட்டதும் தனித்துவிடப்பட்டதும் என்ற கிராமத்திற்கான 10 மில்லியன் பெறுமதியான வேலைத்திட்டத்திலே இவ்வாறான வேலைகளை செய்வதற்கு ஆகும். ஆனால் கௌரவ தவிசாளர் அவர்கள் வரமுடியாத காரணத்தினால் என்னையும் அனுப்பி மக்களையும் அழைத்து எடுக்கப்பட்ட முடிவு ஆகும். பின்னர் அவர்களின் அரசியல் அதிகாரங்களை பயன்படுத்தி ஒட்டுமொத்த பணத்தையும் வீதி அபிவிருத்திக்காக அவர்கள் மாற்றிவிட்டார்கள். எனவே இன்று அவ் இடம் மோசமான இடமாகவும் பாழடைந்தும் காணப்படுகின்றது. சில தவறான விடயங்களுக்கு கூடுதலாக பயன்படுத்துவதாகவும் 11.30 மணிக்கு முன்பள்ளி பாடசாலை முடிந்தவுடன் அப் பிதேசத்தில் உள்ள இளைஞர்கள்

மேலதிகமாக எமது ஊரில் இருந்து செல்லுகின்ற இளைஞர்கள் தவறாக அவ் இடத்தை பயன்படுத்துகின்ற சந்தர்ப்பங்கள் கூடுதலாக இருக்கின்றது. எனவே கௌரவ தவிசாளர் அவர்களின் அனுபவத்தின் முன்னெடுப்பாக அவ் இடத்தை பொழுது போக்குத் தளமாக மாற்றி தற்போது எம்மிடம் தேவையான ஊழியர்களும் இருக்கின்றார்கள். அதில் ஒரு ஊழியரை நியமித்து பாதுகாப்பான இடமாக மற்றிக் கொள்ளலாம்.

அதே பேன்று எமது சம்மாந்துறை பிரதேச சபையின் பராமரிப்பின் கீழ் காணப்படுவதுதான் பாத்திமா முன்பள்ளி பாடசாலை. அதே போல் பிஸ்மில்லா பாலர் பாடசாலையும் சபையின் பராமரிப்பிலே இருக்கின்றது. நான் நினைக்கின்றேன் அப் பாடசாலையில் இருந்த ஆசிரியர் 2019.07.15 ஆம் திகதி அக் கட்டடத்தில் உள்ள சில குறைபாடுகளை சுட்டிக் காட்டி இவைகளை திருத்தித் தருமாறு கேட்டு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார். நான் அவ் இடத்தை கடந்த வாரம் நேரில் சென்று பார்த்தேன். மிகவும் கவலையாக இருந்தது. என்னவென்றால் அக்கட்டத்திற்கு கீழே இடப்பட்டிருக்கின்ற சீமெந்து நான் நடந்து போகின்ற போதே உடைகின்றது. அவ்டத்திலே விழுந்து காயமான பிள்ளைகளை என்னிடம் காட்டினார். அதற்கு ஒரு மதிப்பிட்டறிக்கையும் செய்யப்பட்டிருக்கின்றது.

ஆனால் அது ஏற்கனவே உடைந்திருந்தவற்றை திருத்துவதற்காக செய்யப்பட்டிருக்கின்றது என்று நினைக்கின்றேன். அதனை அவசரமாக செய்ய வேண்டும். அதனோடு இணைந்த அக்கட்டத்தின் கூரை தரமாற்றதாக பொருத்தப்பட்டிருப்பதால் அதுவும் செயலிழந்துள்ளது. அதனுடைய கதவுகளுக்கும் பாதுகாப்பு Lock என்பவற்றை செய்ய வேண்டும். அப் பிரதேசத்திலே மிகவும் பொருத்தமான பாடசாலையாக இருக்கின்றது. ஏனென்றால் அப் பாலர் பாடசாலையில் கல்வி கற்ற மாணவர்கள் கடந்த 5ம் ஆண்டு புலமைப் பரீட்சையிலும் கூடுதலான மாணவர்கள் சித்தியடைந்துள்ளார்கள். எனவே அது எமது சபைக்கும் ஒரு கௌரவம் ஆகும். அப்பாடசாலைக்கான அனைத்து தேவைகளையும் பூர்த்தி செய்து தருமாறு கௌரவ உறுப்பினர்களையும் அத்தோடு கௌரவ தவிசாளர் அவர்களையும் மிகவும் பணிவாக கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

உண்மையிலே அது பழைய கட்டடம் ஆகும். கௌரவ உறுப்பினர் கூறியவாறு நிலத்தை முழுமையாக உடைத்து சீமெந்து இட்டு பூரணமாக அதை செய்ய வேண்டும். உடனடியாக அதற்கு ஒரு இராக்காவலர் ஒருவரை போட வேண்டும்.

கொச்சிக்காய் தூளர் சந்தியில் இருக்கும் கடைகளில் கடை ஒன்றை இறைச்சிக்கடைக்கு மாற்றுவோமா? அல்லது வாடகைக்கு கொடுப்போமா? இறைச்சிக் கடையை அவ் இடத்தில் மாற்றினால் பிரச்சினையாக வருமா? ஒன்றை இறைச்சிக் கடையாக மாற்றினால் அதை ஒரு சிறப்பான கடையாக Tiles, Glass Fitting செய்து அடுத்த வருடத்திற்கு ஏலத்தில் விடும் போது அதை இறைச்சிக் கடையாக ஏலத்தில் விடலாம்.

**கௌரவ உறுப்பினர் எஸ். நளீம் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, கொச்சிக்காய் தூளர் சந்தியிலே இருக்கின்ற கட்டிடம் இறைச்சிக்கடையாக மாற்றுவது என்பது சவாலான விடயமாக இருக்கும். ஏனென்றால் அதன் அருகில் ஊர்காவல் பாதுகாப்பு படையினர் இருக்கின்றார்கள். அவ் இடத்தில் இறைச்சி விற்பனை செய்வது என்பது ஒரு சந்தேகத்திற்குரிய விடயம். அதே நேரம் இறைச்சிக்கடை உரிமையாளருக்கும் போதியளவு அவரது வியாபாரத்தை செய்வதற்கு தடையாக இருக்கும். ஏனென்றால் பிரதான பாதையிலே கடை இருப்பதனால்தான் கூடுதலான நபர்கள் இறைச்சியை வாங்குவதற்கான சந்தரப்பம் இருக்கின்றது. அவ் இடத்தை மாற்றினால் குறிப்பிட்ட நபர்கள்தான் கடையிலே இறைச்சியை கொள்வனவு செய்யக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படும். இவ் இரண்டையும் கருத்தில் வைத்து இறைச்சிக் கடையை மாற்றுவதா? இல்லையா? என்பதை முடிவு செய்ய வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
ஊர்காவற் படை அங்கு அது ஒரு அலுவலகம். அது பிரச்சினை இல்லை. தயவு செய்து கௌரவ உறுப்பினர்கள் எல்லோரும் இணைந்து இறைச்சிக்கடைகள் கொட்டில்களில் இருந்து மாற்றப்பட வேண்டும். உங்கள் எல்லோரது வட்டாரங்களில் தகுதியான இடங்களை இனங்கண்டு. அக் கட்டடங்களை வாடகைக்கு எடுத்து முன்மாதிரியான கடைகளாக மாற்றி ஏலத்தில் விட வேண்டும். அப் பொருத்தமான இடங்களை தீர்மானித்து அவ் இடம் பாதுகாப்பான இடமாகவும், இடவசதி உள்ள இடமாகவும் இருக்க வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ். சரீபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நீங்கள் கூறியது போல் இறைச்சிக் கடையை அவ் இடத்தில் வைப்பது சிறப்பாக இருக்கும் என்று நினைக்கின்றேன். ஏனென்றால் எல்லாவற்றையும் பிரதான வீதியில் மாத்திரம் வைக்க வேண்டும் என்றால் மக்களும் பிரயோசனப்பட வேண்டும். அவ் இடத்தில் மார்க்கட் என்று அமைந்த ஒரு இடத்தில் இறைச்சிக்கடை அமையுமானால் மக்கள் பழக்கப்படுத்திக் கொள்வார்கள். அவ் இடத்தை இறைச்சிக் கடையாக பயன்படுத்தும் போது பெண்களுக்கும் இலகுவாக இருக்கும் என்பதை நான் உள்வாங்குகின்றேன். வண்டு வாய்க்காலில் அமைந்துள்ள இறைச்சிக்கடை சூழல் பாதுகாப்பிற்கு மிகவும் வழிகேடாகவுள்ளது. அவ் வாய்க்காலில் எலும்புகளை போடுவதால் அவ் வாய்க்கால் பழுதடைகின்றது. எனவே அவ் இறைச்சிக்கடை அவ் இடத்தில் அமைப்பது நல்லது என்று நினைக்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
மகளிர் தினத்தினை சென்ற வருடம் பெரிய அளவில் வளத்தாப்பிட்டியில் நடாத்துவதாக இருந்தோம். ஆனால் அது எமக்கு வெற்றியளிக்கவில்லை. இம்முறை மல்வத்தையில் நடாத்துவதற்கு தீர்மானித்துள்ளோம். பெண்கள் பல ஊக்குவிப்பு நிகழ்வுகளுக்கு சென்றிருப்பீர்கள். எனவே பெண் கௌரவ உறுப்பினர்கள் ஒரு குழுவாக செயலாளருடன் சேர்ந்து அதனை எவ்வாறு நடத்துவது என்று தீர்மானிக்க வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எஸ். நிலுவ்பா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, மகளிர் தினம் கொண்டாடுவது வரவேற்கத்தக்க விடயம். ஆனால் மகளிர் தினத்திற்காக செலவு செய்கின்ற பணத்தை எமது ஊருக்கு தேவையான அதாவது பெண் தலைமைத்துவத்தில் வாழுகின்ற குடும்பங்களுக்கு ஏதாவது செய்ய வேண்டும். மகளிர் தினத்தை கொண்டாடுவதற்கு எமது ஆண் கௌரவ உறுப்பினர்களும் உதவியாக இருக்க வேண்டும். ஏனென்றால் மகளிர்களுக்கான ஒதுக்கீட்டில் ஆண்களுக்கும் அவ் ஒதுக்கீடு வழங்கப்படுகின்றது. எனவே எல்லோரும் சேர்ந்து நல்ல ஒரு தீர்மானத்தை எடுத்து சிறப்பான முறையில் மகளிர் தினத்தை நடாத்த வேண்டும்.

**கௌரவ உப தவிசாளர் வீ. ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இரண்டு நிகழ்வுகள் என்று கூறினீர்கள். சம்மாந்துறையை மையப்படுத்தி நடாத்துவதா? அல்லது மல்வத்தையை மையப்படுத்தி நடாத்துவதா? அல்லது இரண்டையும் இணைத்து ஒரு இடத்தில் நடாத்துவதா?

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இது எமது கருத்து. ஆனால் பெண் கௌரவ உறுப்பினர்கள் எப்படி செய்வது, என்ன செய்வது என்று தீர்மானிக்க வேண்டும். பெண்கள் உறுப்பினர்களாக போடுபட்டதற்கு காரணம் அவர்களின் தலைமைத்துவத்தை வெளிக்காட்டுவதற்கு ஆகும்.

**கௌரவ உறுப்பினர் கே.எம். இன்பவதி அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, மகளிர் தினத்திற்காக எமது ஊக்குவிப்பு பணத்தை முன்கூட்டியே தருமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**தீர்மானம் - 04/24/08**
சர்வதேச மகளிர் தினத்தை மல்வத்தையில் கொண்டாடுவதற்கும், அதற்கான செலவீனத்தையும் அங்கீகரிப்பதற்கான பிரேரணை.

பிரேரித்தவர் : கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட்
ஆமோதித்தவர் : கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எஸ்.நிலுவ்பா

இப் பிரேரணை சபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/24/09**
ஹிஜ்ரா புர (கொச்சிக்காய் தூளர் சந்தி) கடை திருத்துவதற்கான மதிப்பீட்டை அங்கீகரிப்பதற்கான பிரேரணை.

பிரேரித்தவர் : கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட்
ஆமோதித்தவர் : கௌரவ உறுப்பினர் எம்.ரீ.பௌசுள்ளாஹ்

இப் பிரேரணை சபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/24/10**
அஸ்ரப் பொது நூலகம் திருத்துவதற்கான மதிப்பீட்டை அங்கீகரிப்பதற்கான பிரேரணை.

பிரேரித்தவர் : கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட்
ஆமோதித்தவர் : கௌரவ உறுப்பினர் ஏ.அச்சி முஹம்மட்

இப் பிரேரணை சபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/24/11**
பிஸ்மில்லா பாலர் பாடசாலையை திருத்துவதற்கான மதிப்பீட்டை அங்கீகரிப்பதற்கான பிரேரணை.

பிரேரித்தவர் : கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட்
ஆமோதித்தவர் : கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம்

இப் பிரேரணை சபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/24/12**
இஸ்மாயில்புர, வளத்தாப்பிட்டி கல்வெட் திருத்துவதற்கான பிரேரணை.

பிரேரித்தவர் : கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட்
ஆமோதித்தவர் : கௌரவ உறுப்பினர் என். கோவிந்த சாமி

இப் பிரேரணை சபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
மல்வத்தை கடையறைகள் 03 இருக்கின்றது. இவை பழைய கடையறைகள் ஆகும். கடையின் 75% Street line இற்குள் வருகின்றது. இக் கடையறைகளை உடைத்தால் திரும்ப கட்டுவதில் அர்த்தம் இல்லை. அதன் கூரையை திருத்தி செய்வது என்றால் 6 இலட்சம் தேவைப்படுகிறது. அதை செய்வதா? அல்லது பாவிக்க இயலாத கட்டடம் என்று ஒதுக்குவதா?

**கௌரவ உப தவிசாளர் வீ. ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, மல்வத்தை சந்தியில் அமைந்திருக்கும் கடைகள் சபைக்கு சொந்தமான கடைகள் ஆகும். அது முழுமையான கடையாக இருந்து தற்போது அதன் கூரை பழுதடைந்து காணப்படுகின்றது. அதை கைவிடுவோமானால் எம்மை விட்டு முற்றுமுழுதாக பறிபட்டு சென்று விடும். ஏனெனில் தற்பொழுது இராணுவ பரிசோதனை நிலையம் அமைக்கப்பட்டு இருக்கின்றது. அவர்கள் ஓய்வெடுத்து தங்குவதற்கு இடம் தேடிக்கொண்டிருக்கின்றார்கள். எனவே கைவிட்டு போகின்ற சந்தர்ப்பம் ஏற்படும். எமது கட்டடங்களுடன் அதன் அருகில் ஒரு இடமும் இருக்கின்றது அதனையும் எமக்குரிய சொந்தமான நிலமாக மாற்றுவதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்வதே சரி கைவிட்டோமானால் அப் பிரதேசம் முற்றுமுழுதாக பாதுகாப்பு படையினருக்கு சென்று விடும் என்று கூறிக்கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ. அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, அவ் இடத்தை திருத்துவதற்கு 6 இலட்சம் தேவை என்று கூறினீர்கள். ஆனால் அது பழைய கூரையும், பழைய இடமாகவும் இருப்பதனால் அதன் மாத வாடகை குறைவான வாடகையாகவே இருக்கின்றது. எனவே அதனை திருத்திக் கொடுத்து தற்போதைய நிலைக்கு ஏற்றமாதிரி அவர்களிடம் இருந்து வாடகையையும் அறவிட வேண்டும்.

**தீர்மானம் - 04/24/13**
மல்வத்தை 1ம், 2ம், 3ம் கடையறைகளை திருத்துவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.அச்சி முஹம்மட் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
பட்டதாரி பயிலுனர்களில் ஒரு பட்டதாரி வெளிநாட்டில் Accounts பிரிவில் வேலை செய்தவர். அவரிடம் Accounting ஐ கணனி மயப்படுத்துவதற்கு பொறுப்பு கொடுத்துள்ளோம். தற்போது அவர் அடிப்படை வேலைகளை செய்து வருகின்றார். ஆனால் அவர் தற்போது Excel Sheet இல் தான் செய்கின்றார். அதற்கு மேலாக Accounting Software ஒன்றை எடுத்து உள்ளூராட்சி மன்றங்களுக்கு முன்மாதிரியாக Accounting System ஒன்றை உருவாக்க வேண்டும்.

**கௌரவ உப தவிசாளர் வீ. ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, தங்களின் கருத்து நல்ல கருத்து. ஏனெனில் எமது வருமானங்கள் முறையாக வருமானப் படிவங்களில் பூரணப்படுத்தப்பட்டு பணம் வைப்புச் செய்யப்படுகின்றது. ஆனால் பதிவுகள் முறையாக பேணப்படாத நிலை இருக்கின்றது. இது எதிர்காலத்தில் பாரிய சிக்கலில் வந்து சேரும். எனவே Excel Sheet இல் செய்வதற்கு மேலதிகமாக முறையான Software களை பிரதேச சபைக்குள் வரும் அனைத்து வருமானங்களையும் உள்ளடக்கியதாக ஒரு மாதிரியை தயாரிக்க வேண்டும். அத்துடன் செலவு, மீதி என்ன அடிப்படையில் பேணப்படுகின்றது என்ற ஒரு திட்டத்திற்கான முறையான Software களை தயாரிப்பது சிறந்ததாக இருக்கும்.

**தீர்மானம் - 04/24/14**
முறையான Accounting Software களை தயாரிப்பதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உப தவிசாளர் | வீ.ஜெயச்சந்திரன் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
முஹல்லா மஹல்லா மையவாடியில் ஒரு சவால் இருக்கின்றது. அதாவது ஜனாசாக்களை அடக்கம் செய்வதற்காக கப்ர் தோண்டுகின்ற போது மலை வருகின்றது. எனவே ஒரு எல்லையை தீர்மானித்து அவ் எல்லைக்குள் அகற்றக்கூடிய கற்களை அகற்றி நேர காலத்துடன் தயாரித்து வைத்தால் சிறப்பாக இருக்கும்.

**கௌரவ உறுப்பினர் எஸ். நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, அப் பிரதேசம் தற்போது நடைமுறையில் இருக்கின்ற பிரதேசம். ஆனால் கப்ர் தோண்டுகின்ற போது வருகின்ற கற்கள்தானே பிரச்சினை. அதை அகற்றுவது என்றால் எப்படி?

**கௌரவ உறுப்பினர் ஏ.எல்.எம். ஜிப்ரி அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, அவ் இடத்திற்கு நான் பல தடவை சென்றிருந்தேன். குறிப்பிட்ட கீழ்தான் பெரிய கல் இருக்கின்றது. மேல் உள்ள கற்கள் சிறியது அதை இலேசாக அகற்றலாம். அதை அகற்றிவிட்டு அதற்கு மேல் வேறாக மண் போட்டால் சிறப்பாக இருக்கும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இதற்கு கௌரவ உறுப்பினர் ஜிப்ரி, கௌரவ உறுப்பினர் நளீம், கௌரவ உறுப்பினர் சரிபா போன்றவர்கள் சேர்ந்து இதை எவ்வாறு செய்யலாம் என்று தீர்மானியுங்கள்.

**தீர்மானம் - 04/24/15**
முஹல்லா மஹல்லா மையவாடியில் ஜனாசாக்களை அடக்கம் செய்வதற்கு கற்களை அகற்றி நிலப்பரப்பை தயார்படுத்துவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எல்.எம்.ஜிப்ரி |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ உப தவிசாளர் வீ. ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, மல்வத்தை உப அலுவலகமானது கடந்த காலங்களிலே 03 எழுது வினைஞர்கள், ஒரு தொழில்நுட்ப உத்தியோகத்தர், ஒரு நூலகர், ஒரு தூதுவர் என ஏறக்குறைய 7,8 ஊழியர்கள் கடமையாற்றி நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த அலுவலகமாகும். இறுதியாக கடமை புரிந்த பிரதான எழுது வினைஞர் பாக்கியராஜா அவர்கள் இடமாற்றம் பெற்றுச் சென்றதும், அத்துடன் அதில் கடமையாற்றிய நூலகரும் தற்போது ஓய்வூதியம் பெற்றுச் சென்றுள்ளார். அவ் 2 இடங்களுக்கும் நியமனம் வழங்கப்படவில்லை. அக் கடமைகள் முற்றுமுழுதாக கைவிடப்பட்டு தற்பொழுது எமது பிரதேச உறுப்பினர்களுக்கு நீர் இணைப்புக்காக வழங்கப்பட்ட நீர் இணைப்பு படிவங்களை இங்கு சபைக்கு வந்து பூரணப்படுத்தி தொழில்நுட்ப உத்தியோகத்தர்களிடம் கையொப்பம் பெற வேண்டிய நிலை இருந்து வருகின்றது. எனவே கடந்த காலங்களில் நடைபெற்று வந்த அனைத்து செயற்பாடுகளும் மீள எமது மல்வத்தை பிரதேசத்தின் உப அலுவலகத்திலே நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என அப் பிரதேசத்தை சேர்ந்த மக்கள் தொடர்ந்து கோரிக்கையை முன் வைத்து வருகின்றார்கள்.

அதுமாத்திரமல்லாமல் கடந்த காலங்களிலே யோகானந் தொழில்நுட்ப உத்தியோகத்தர் அவர்கள் ஒரு வாரத்தில் 2 தடவை அவ் அலுவலகத்தில் கடமை புரிந்து வந்தார். ஆனால் தற்போது இருக்கும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் ஏதும் தேவை இருப்பின் மாத்திரம் வருவார்கள். எனவே ஒரு எழுது வினைஞரை தொடர்ந்து கடமையாற்ற நியமிக்க வேண்டும் என்பதுடன் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவரை அவ் இடத்திற்கு நிலையாக நிரந்தரமாக நியமிக்க வேண்டும் என்பதுடன் தொழில்நுட்ப உத்தியோகத்தரை வாரத்திற்கு ஒரு தடவை அவ் இடத்திற்கு

வந்து அப் பிரதேச மக்களின் அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கு அனுமதி பெறுவதற்கான விண்ணப்பங்களை சிபார்சு செய்வதற்கு சந்தர்ப்பம் வழங்க வேண்டும் என்று கூறிக் கொள்வதோடு நூலகர் ஒருவர் இல்லை. நூலக உதவியாளர் அவ் இடத்தில் இருந்து அக் கடமைகளை செய்து வருகின்றார். அத்துடன் வேலைகளை பணிப்பதற்கு ஒருவர் இல்லை. காலையில் திறந்து மாலையில் மூடும் அலுவலகமாக இருந்து கொண்டு வருகின்றது. அது மன வேதனைக்குரியதாக இருக்கின்றது. எனவே அதற்காக ஒரு நிரந்தர ஊழியர் ஒருவரை நியமிக்க உரிய ஏற்பாட்டை செய்து விட்டு அங்கு கடந்த காலங்களிலே நடைபெற்ற செயற்பாடுகளை மீள உயிர்ப்பிக்கக் கூடிய நடவடிக்கைகளை செய்ய வேண்டும். நாம் 20 உறுப்பினர்களும் ஒரு தடவையாவது ஒன்று கூடி எமது சொத்தை பராமரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் கே.எம். இன்பவதி அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, உப அலுவலகத்தை சென்று பார்க்கின்ற போது காட்டுக்குள் செல்வது போல் இருக்கின்றது. பின் பக்க வேலி மிகவும் மோசமாக இருக்கின்றது. இங்கு இருக்கின்ற ஊழியர்களைக் கொண்டு அவ் இடத்தை துப்பரவு செய்து தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
தற்போது ஒரு பட்டதாரிப் பயிலுனர் ஒரு கிழமைக்கு இரு தடவை அங்கு செல்கின்றார். ஒரு நூலக உதவியாளர், மாகாண சபையால் நியமிக்கப்பட்ட பெண் ஊழியர் அத்துடன் காவலாளியும் இருக்கின்றார். உடனடியாக நடைமுறைக்கு வரும்படியாக பட்டதாரி பயிலுனரை அவ் அலுவலகத்திற்கு நிரந்தரமாக நியமித்து அவ் எல்லைக்குள் இருக்கின்ற வளங்களை பராமரிக்க வேண்டும்.

**கௌரவ உப தவிசாளர் வீ. ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, அபிவிருத்தி உத்தியோகத்தரை வழங்குவதோடு, ஒரு கிழமைக்கு ஒரு தரம் PHI வந்து செல்கின்றார் அத்துடன் IO அவர்களும் சில நேரம் வருகை தருகின்றார். ஆனால் ஒரு தொழில்நுட்ப உத்தியோகத்தரையும் கிழமைக்கு ஒரு தடவை அனுப்ப வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
செயலாளரும் மாதத்திற்கு ஒரு தரம் அங்கு சென்று மேற்பார்வை செய்து முழுப்பொறுப்பையும் எழுத்து மூலமாக அவர்களுக்கான கடமைகளை கொடுக்க வேண்டும். உடனடியாக செயற்படும் வண்ணம் கிழமைக்கு ஒரு தரம் தொழில்நுட்ப உத்தியோகத்தர் செல்வார், மாதத்திற்கு ஒரு தரம் செயலாளரும் செல்வார். அவ்விடயங்களை சரியாக செய்வதற்கு கௌரவ உறுப்பினர்களும் உதவ வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உப தவிசாளர் வீ. ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நாம் அனைவரும் ஒன்று கூடி அந் நிகழ்வை ஒரு நிகழ்வாக செய்தால் சிறப்பாக இருக்கும் என நான் கருதுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எஸ். நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நெய்னாகாடு பாலர் பாடசாலை தொடர்பாக பல தடவை பேசியும் எந்த தீர்வும் கிடைக்கவில்லை. இன்று அங்கு இருக்கின்ற மக்கள் ஒட்டுமொத்தமான குறைபாட்டை எம் மீதும், எமது சபை மீதும் குறைகூறுகின்றார்கள். ஏனென்றால் இவ்வளவு காலமும் பராமரிப்பில் இருந்த பாடசாலை நீங்கள் சபைக்கு வந்தவுடன் அதனை இல்லாமல் செய்து விட்டீர்கள் என்கின்ற ஒரு குற்றச்சாட்டும் எம்மீது திணிக்கப்பட்டிருக்கின்றது. கௌரவ தவிசாளர் அவர்களே எமது ஊரைப் பொறுத்தவரையில் மல்காம்பிட்டி கிராம சேவகர் பிரிவு என்பது ஒரு தனிப்பட்ட கிராமம். ஏறத்தாள அக் கிராமத்தில் இருந்து நகரத்தை வந்தடைவதற்கு 12 KM பயணிக்க வேண்டிய சந்தர்ப்பம் இருக்கின்றது. ஏனைய வகுப்புகளில் கல்வி கற்கின்ற மாணவர்கள் ஏதோ

ஒரு வகையில் எமது ஊரில் இருக்கின்ற பாடசாலையில் கற்கின்றார்கள். அங்கே மீண்டும் ஒரு பாலர் பாடசாலையை அமைப்பதற்குரிய பௌதீக வளங்களும் இல்லை. அதனை முன் நின்று செய்வதற்குரிய கல்வி அறிவை உடையவர்களும் அப் பிரதேசத்தில் இல்லை.

ஏனென்றால் நாட்டின் பல பாகத்தில் இருந்து ஏதோ ஒரு வகையில் மூவின மக்களும் அங்கு வாழுகின்ற நிலை இருக்கின்றது. முஸ்லிம்கள் பரந்து வாழுகின்ற பிரதேசத்தில் எத்தனை பாலர் பாடசாலைகளை சபையின் கீழ் நடாத்துகின்றீர்கள். நாங்கள் எந்த கல்வி அறிவும் இல்லாமல் இன்னொரு பாலர் பாடசாலைக்கு கொண்டு சேர்க்கவும் முடியாத ஒரு நிலையிலும் நாங்கள் இவ்வாறே இருக்க வேண்டுமா? என்ற கேள்வியும் என் மீது கேட்கின்றார்கள். எனவே சபையிலே இருக்கும் கௌரவ உறுப்பினர்கள் அனைவரையும் வேண்டியவனாக இது என்னுடைய தனிப்பட்ட பிரச்சினையும் இல்லை, என்னுடைய வட்டாரத்தினுடைய பிரச்சினையும் அல்ல.

எதிர்காலத்தில் எமது ஊரில் பின்தங்கிய பிரதேசங்களில் இவ்வாறான நிலை வரக்கூடாது என்பதில் நான் மிகவும் உறுதியாக இருக்கின்றேன். இதனை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தி இதற்கான முயற்சிகள் எடுக்கவில்லை என்றும் கூறவில்லை. ஆனால் கௌரவ தவிசாளர் அவர்களால் முடிந்த வரைக்கும் இதிலே முயற்சி எடுத்தார். ஆனால் மாகாண சபையின் அதிகாரத்தின் கீழ் பாலர் பாடசாலை சென்றதால் அவர்களது சட்டக்கோவைக்குள் அகப்பட்டு இருக்கின்றது. எனவே இதற்கான மாற்று வழியையாவது சபையின் ஊடாக செய்யலாம் என்பதை சபையில் தீர்மானமாக எடுத்து அப் பிரதேச மக்களினுடைய கல்விக்கு தடையாக இருக்காமல் எம்மால் முடிந்ததை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ. அச்சி முஹம்மட் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, பல முறையீடுகளும் செய்திருக்கின்றார்கள். அதாவது குறிப்பிட்ட வயது வந்தவுடன் பிள்ளைகளை கூலி தொழிலுக்கு அனுப்புகின்றார்கள். அடுத்ததாக மல்லிகை தீவு என்கின்ற கிராமம் எமது பிரதேசத்தில் மிகவும் பழமை வாய்ந்த ஒரு கிராமம். அப் பிரதேசத்தில் வயல்களுக்கு பாவிக்கப்படும் Chemical ஆல் அந்தப் பிரதேசத்தில் வாழுகின்ற குடிநீரை குடித்த மக்கள் நோய்வாய்ப்பட்டு இருக்கின்றார்கள். அப் பிரதேசத்தில் பாலர் வகுப்புக்கு 5 பிள்ளைகள் 2 பிள்ளைகள் என்று குறைந்து கொண்டு செல்லுகின்றது. அப் பிரதேசத்தில் குடியிருக்கின்ற மக்களுக்கு குடிநீர் பிரச்சினைகளையும் ஏனைய பிரச்சினைகளையும் எதிர்நோக்குகின்றனர். அப் பிரதேச மையவடிக்கு மதில் அமைத்துக் கொடுத்தோம். ஆனால் ஏனைய விடயங்களிலும் கவனம் செலுத்த வேண்டும். குப்பைகளை பாதையோரங்களில் கொட்டப்பட்டு திடலாக மாற்றம் அடைந்துள்ளது. மல்லிகை தீவு கிராமங்களில் பாதுகாப்பான குடிநீர் வசதிகளை ஏற்படுத்தி கொடுக்க வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் ஏ. யூசுப் லெப்பை அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, எமது சபையின் கௌரவ உறுப்பினர் வளர்மதி அவர்களின் இல்லத்தில் ஏற்பட்ட மரண சம்பவத்திற்காக இச் சபை சார்பாக ஆழ்ந்த அனுதாபத்தை கௌரவ வளர்மதி உறுப்பினருக்கும் அவரது குடும்பத்தார்களுக்கும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எமது பிரதேச சபையின் அனைத்து செயற்பாடுகளும் சிறப்பாக நடைபெறுவதையிட்டு சந்தோசமடைகின்றோம். இந் நிலையில் நகரை அண்டியுள்ள வடிகான்களில் குறிப்பாக மல்காம்பிட்டி வடிகான்கனில் Hotel களில் இருந்து கழிவு நீர் விடப்படுகின்றது. அதனால் அந் நகரப்பிரதேசத்தில் துர்நாற்றம் வீசுகின்றது. கல்முனை பிரதேச வீதியிலும் கூட அவ்வாறான செயற்பாடுகள் தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றது. நாங்கள் பிரதேச சபைகளின் நடவடிக்கைகள் மூலம் அறிவுறுத்தல்களை அவர்களுக்கு வழங்கி இருந்தாலும் தொடர்ந்தும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. Hotel உரிமையாளர்களுக்கு தீர்க்கமான ஒரு வழிமுறையை வழங்கி எமது சபை ஒரு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எஸ். நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உறுப்பினர் அச்சி முஹம்மட் அவர்கள் கூறியவாறு மல்லிகை தீவினுடைய குடிநீர் பிரச்சினை என்பது பெரிய பிரச்சினை அல்ல ஏனென்றால் தேசிய நீர்வடிகால் அமைப்பு சட்டதிட்டத்தின் கீழ் கிழக்கு பொது முகாமையாளர் ஊடாக செய்யக்கூடிய வேலைத்திட்டமாகும். அவ்வளவு பாரிய சவாலான விடயம் அல்ல. அவர்களுக்கு குடிநீர் வழங்குவது என்பது நான் நினைக்கின்றேன் 40, 45 மில்லியன் செலவு செய்தால் அவர்களுக்கு மல்வத்தை சந்தியில் இருக்கின்ற குடிநீரை மல்லிகை தீவிற்கு வழங்கலாம். இது தொடர்பாக கடந்த வருடமும் சபையிலே பேசப்பட்டபோது எமது சபையின் ஊடாக கிழக்கு பொது முகாமையளருக்கு எழுத்து மூலமாக அறிவிப்பதாக கூறப்பட்டது. ஆனால் அது நடந்ததா? இல்லையா? என்று தொரியவில்லை. இது பாரிய விடயம் அல்ல எமது சபையில் ஊடாக ஒரு முயற்சி எடுத்தால் அது சம்மந்தப்பட்ட அமைச்சர் அவர்களை சந்தித்து குடிநீர் பிரச்சினை நாங்கள் இலகுவாக தீர்த்து வைக்கலாம் என்று நினைக்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நெய்னாகாட்டு பிரச்சினையை சபை உறுப்பினர்கள் சரியாக உள்வாங்காவிட்டால் அந்தக் குற்றச்சாட்டுகள் தொடர்ந்து வந்து கொண்டே இருக்கும். ஏனென்றால் சபைக்கு என்ன செய்யலாம் என்ன செய்ய முடியாது? என்று நமக்கு தெளிவாக தெரிய வேண்டும். ஒரு பாடசாலை ஆசியரியருக்கு O/L, A/L கல்வித் தகமைகள் இருக்க வேண்டும். 2 பேர் நியமித்தார்கள் 2 பேரும் போகவில்லை. எங்களுக்கு விண்ணப்பித்த எல்லோரினதும் பெயர பட்டியலை எடுத்து சென்று அவரை சந்தித்து அதில் ஏதாவது பிரச்சினையாகுமானால் நெய்னாகாட்டு பிரதேசம் ஒரு பின்தங்கிய, தூரமான பிரதேசம் அக் கிராமத்தில் இருந்தாவது 2 பிள்ளைகளை விதி விலக்காக உருவாக்க வேண்டும்.

கௌரவ உறுப்பினர் யூசுப் லெப்பை அவர்கள் மல்காம்பிட்டி கழிவு சம்மந்தமாக கூறினார். Hotel கள் பாரிய பிரச்சினை அவர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருக்கின்றது. இனிமேல் சட்ட நடவடிக்கை எடுப்பதை தவிர வேறு ஒன்றும் இல்லை.

மல்லிகைதீவை பொறுத்தவரையில் உங்களுக்கு தெரியும். ஆவ்விடயத்தில் ஒரு Community Well ஒன்று இருக்கின்றது. அது Jaica திட்டத்தில் Water Supply Scheme ஒன்று உருவாக்கப்பட்டது. அது Phosperous Content கூடிய படியால் அதை பயன்படுத்துவதில்லை. சபை இன்றுவரை கிழமைக்கு 2 நாள் தண்ணீர் வழங்கிக் கொண்டு இருக்கின்றோம். எவ்வித குறைபாடும் இல்லாமல் நடக்கின்றது. ஆனால் துாரதிஸ்டவசமாக கௌரவ அமைச்சர் ரவூப் ஹக்கிம் அவர்கள் இருக்கின்ற காலத்தில் கூட அதற்குரிய Estimate ஐ செய்தார்கள். அது நடமுறையில் வரவில்லை. உத்தியோகத்தர் மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படவில்லை. அந்த நேரம் Estimate செய்த 16 மில்லியன் ஆகும். அந்த சூழல் மாசடைவதற்கு காரணமாக விவசாயிகள்தான். நான் மீண்டும் ஒரு முயற்ச்சி ஒன்று எடுத்து ஆளுனருடனும் இதைப் பற்றி கதைத்து ஒரு முடிவு எடுக்க வேண்டும். அதில் இருப்பது 72 குடும்பங்கள் ஆகும். அக் குடும்பங்களுக்கு கட்டாயம் இதை செய்து கொடுக்க வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் கே.எல். சிஹாமா அவர்கள்:**
கௌரவ உறுப்பினர்களின் கருத்துக்களை உள்வாங்கியவளாக, கௌரவ உறுப்பினர் நளீம் கூறியது போல் பாலர் பாடசாலை விடயங்களைப் பற்றி உங்களிடம் நான் கூறிய போது எனக்கு ஆலோசனை வழங்கி என்னை அவர்களிடம் கதைக்க சொன்னீர்கள். நான் அவர்களிடம் கதைத்த போது நம்பிக்கையாளர் சபைகளிடம் இருக்கும் நிதியை வெளியேற்ற முடியாத காரணத்தை என்னிடம் கூறினார். கல்விக்கு என்று ஒரு தொகை பணத்தை வெளியிடலாம் என்று கூறினார். அவ்விடத்தில் நான் கூறினேன் விடுபட்ட கிராமமாக நெய்னாக்காடு காணப்படுகின்றது. பாலர் பாடசாலை மாணவர்களுக்கு கல்விக்காக அப் பணத்தை உபயோகிக்க முடியுமோ என்று கேட்ட

போது அவர் கூறினார். நிச்சயமாக அதை செய்து தர முடியும். ஆனால் நீங்கள் 2 அல்லது 3 மாதங்கள் காக்க வேண்டி இருக்கும் என்றும் பிரதேச செயலாளர் அவர்களை இது தொடர்பாக சந்தித்த போது அவர் கூறினார். என்னால் 5000 ரூபா இவ்விடத்திற்காக தர முடியும் அதற்கு மேலாக நான் தருவது என்றால் அனுமதி எடுக்க வேண்டும். அங்கிருக்கின்ற Communtiy Center இல் இருக்கின்ற தலைவர் செயலாளர், பொறுப்பாளர் என்று தொலைபேசி இலக்கம் கொடுத்திருக்கின்றார். அந்த தொலைபேசி எதுவும் வேலை செய்வதில்லை. நாம் இதை தொடர்ந்தால் அப் பிரச்சினைக்கு தீர்வு வரும் என்று நினைக்கின்றேன்.

கௌரவ உறுப்பினர் அச்சி முஹம்மட் அவர்கள் கூறினார்கள் பாடசாலை கல்வி இடைநிறுத்தம் செய்யப்படுகின்றது என்று, அக் கல்வி இடைநிறுத்தம் செய்யப்படுவதானால் ஏதாவது ஒரு காரணம் இருக்கும். கூலி தொழிலுக்கு செல்வது மட்டும் காரணம் அல்ல. படிக்கக் கூடிய பெண்கள் காணப்படுகின்றார்கள் ஆனால் அப் பெண்களுக்கு போக்குவரத்து செய்வதற்குரிய வருமானம் இல்லை. எனவே நாம் சபையால் ஒரு தீர்மானம் எடுத்து போக்குவரத்து சபைக்கு பஸ் ஒன்று போடுவதற்குரிய அனுமதியை கேட்கலாம் என்று நினைக்கின்றேன். அவர்கள் அவர்களது வருமானத்தைப் பற்றி கூறுவார்கள். ஆனால் நாம் தாழ்மையான வேண்டுகோளாக கேட்டு, அப் பாடசாலை மாணவர்களுக்குரிய போக்குவரத்து வலசதிகளை ஏற்படுத்த வேண்டும்.

கௌரவ தவிசாளர் அவர்களே, இச் சபை 2 வருடங்கள் முடிந்திருக்கின்றது. ஆனால் வரி அறவிடுவது தொடர்பாக சென்ற சபையில் எல்லோரும் இணைந்து வரிகளை அறவிட வேண்டும் என்று கூறினோம். ஆனால் எவ்வாறு அறவிட வேண்டும், எப்படி அறவிட வேண்டும் என்று இன்று வரைக்கும் கூறப்படவில்லை. இச் சபையில் 75 வீதத்திற்கு மேல் செலவுகளை பற்றி மாத்திரம் கதைக்கப்படுகின்றது. வருமானத்தைப் பற்றி கதைப்பது மிகவும் குறைவு. ஆனால் எம்மால் வருமானத்தை அதிகரிக்கலாம் என்ற நம்பிக்கை இருக்கின்றது. நாம் வருமானத்தை மிக இலகுவாக ஏற்படுத்தக் கூடிய வழிமுறை தற்போது இருக்கின்றது. அதாவது மல்காம்பிட்டி பள்ளிவாசலுக்கு அருகில் பச்சைப் பசேல் என்று ஒரு அழகான நிலம் ஒன்று இருக்கின்றது. அதில் செலவு இல்லாமல் புற்று மண்ணால் ஒரு Hall அமைத்து சமையலுக்கான பொருட்களையும் எடுத்து ஒரு நேரம் களிப்பதற்குரிய இடமாக மாற்றலாம் என நினைக்கின்றேன். நிச்சயமாக இதில் எமக்கு அதிக வருமானம் கிடைக்கும். எமது சபை ஏனைய சபைகளை ஒப்பிட்டு பார்ப்பதை விட எமது சபையை சிறப்பாக செய்ய வேண்டும்.

அதே போல் இஸ்மாயில் பாடசாலை ஒன்று இருக்கின்றது. அதன் அருகாமையில் நீர்பாசனத் திணைக்களத்திற்குரிய வண்டு இருக்கின்றது. அப் பிரதேசத்தில் சிறுவர்களுக்குரிய தாரா ஓட்டம் அமைத்து அவ்விடத்திலும் வருமானம் பெறலாம். இவ்வாறு செய்தால் அவ்விடத்தில் குப்பைகள் கொட்டுவதையும் குறைக்கலாம். இதற்குரிய Proposal கள் செய்து தாருங்கள் என்றால் சபையால் செய்து தருவதற்கு தயாராக இருக்கின்றோம். இவ் வேலையை எடுக்கலாமா? செய்யலாமா? என்ற அறிவு போதாமல் இருக்கலாம். அதற்குரிய அறிவையும் தந்து உதவுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

கௌரவ உறுப்பினர் சிஹாமாவின் கருத்துக்கள் தொடர்பாக அவ் விடயங்களில் எமக்கு பாதாகமாக இருக்கும் சவால் என்னவென்றால் S வாய்க்காலை கௌரவ உறுப்பினர் அச்சி முஹம்மட் அவர்களுக்கும் தெரியும் 2012 ஆம் ஆண்டு இருந்து அமைச்சர் அளவு வரைக்கும் சென்று S வாய்க்காலின் Reservation எல்லாவற்றையும் சபைக்கு பாரம் தர வேண்டும் என்று கேட்டோம். இதே காரணங்களுக்காக கைகாட்டி சிறுவர் பூங்கா உருவாக்கியதற்கு காரணம் என்னவென்றால் அவ் வாய்க்காலில் தொடர்ந்து நீர் வருவதில்லை. Water Supply Scheme வருவதற்கு முதல் நீர்பாசன மினிட் ஒன்று இருக்கின்றது. 365 நாளும் 2 Inch நீர் அவ் வாய்க்காலில் இருக்க வேண்டும். அவ்வாறு இருந்தால் மாத்திரம் நீர் ஊறும். அதை எமக்கு தருவதற்கு தயார் இல்லை. அதை தந்தால் பூங்காவாக மாற்றலாம். கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள் சபையுடன் இணைந்து இருந்தால் அதிக பிரச்சினைகள் தீர்ந்து இருக்கும். அவர்கள்

தனித்தனியே இயங்கியதால் அம் முழு அபிவிருத்தியும் இவ் ஊர் நலனுக்காக நடக்கவில்லை. ஒற்றுமை ஒன்று இல்லாதபடியினால் அவ் வரப்பிரசாதத்தை இழந்தோம். இதுதான் எமது ஊரின் விதி. ஆனால் இச் சபை எந்தவொரு பாராளுமன்ற உறுப்பினர்களின் நடவடிக்கைகளுக்கு தடையாக இருந்ததில்லை.

செயலாளர் நாளாந்தம் வருமானத்தை பார்த்து வருகின்றார். அடுத்த சபைக்கு மாதாந்த வருமானமும் சமர்ப்பிக்கப்பட வேண்டும். வரி அறவிடுவது என்பது ஒரு துண்டுப் பிரசுரம் செய்து விட்டு ஒவ்வொரு வீதியாக சென்று அறவிட வேண்டும். அது தவறினால் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ். சரீபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சம்மாந்துறையில் இருந்து கொண்டிருக்கும் ஆதார வைத்தியசாலை பற்றி நான் இவ் இடத்தில் கூற விரும்புகின்றேன். சம்மாந்துறை வைத்தியசாலையை பார்த்தோமானால் எல்லோரும் வசதி படைத்த வைத்தியசாலை என்று நினைப்பார்கள். சம்மாந்துறையை பொருத்தமட்டில் எமது ஊருக்கு கிடைத்த உத்தமன் என்றுதான் கூறவேண்டும். இவ்வளவு காலமும் இருந்த வைத்திய அத்தியட்சகர்களை விட தற்போது எங்களுக்கு வந்திருக்கும் அத்தியட்சகர் உண்மையிலே போற்றத்தக்கவர். அவர் கௌரவ உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள், பொதுமக்கள், நோயாளிகள் யார் என்றும் அவர்களிடம் எப்படி பேச வேண்டும் என்ற நடைமுறை பண்பாட்டையும் வளர்த்துக் கொண்டிருக்கும் வைத்திய அத்தியட்சகராக Dr ஆசாத் அவர்கள் திகழ்வதை இச் சந்தர்ப்பத்திலே கூற விரும்புகின்றேன்.

சம்மாந்துறையின் அபிவிருத்தி தொடர்பாக நாங்கள் இச் சபைக்கு வந்த போது அக் குழுவில் போடுபட்டதாக கூறப்பட்டது. ஆனால் அது தொடர்பாக எந்த அறிவித்தலும் இல்லை. மத்திய அரசாங்கத்தில் இருந்து கிடைக்கக் கூடிய வளங்கள் சம்மாந்துறைக்கு கிடைப்பதில்லை. ஏனென்றால் மாகாண சபையால் வைத்தியசாலை உள்வாங்கப்பட்டிருப்பதால் ஆகும். அங்கு எத்தனையோ கடிதங்கள் கொடுத்த பிறகுதான் அதில் ஒன்றுக்கு மட்டும் பதில் வரும். முதல் இருந்த வைத்திய அத்தியட்சகர்களை குறையாக கூற விரும்பவில்லை. அதை யார் கொண்டு வந்தாலும் தான் கொண்டு வந்ததாக என்ற பெருமைக்காக எங்களது அரசியல் வாதிகளையோ அல்லது உறுப்பினர்களையோ அல்லது ஏனைய சமூகத்தையோ உள்வாங்குவது குறைவு. அவர்களுக்கு விரும்பிய ஒரு சிலரை வைத்து அபிவிருத்தி குழு கூட்டத்தை நடாத்தி வந்தார்கள். இவைகளுக்கு அப்பாற்பட்ட வைத்திய அத்தியட்சகராக தற்போதய அத்தியட்சகர் திகழ்ந்து கொண்டிருக்கின்றார்.

நான் ஒரு கௌரவ உறுப்பினராகவும், உத்தியோகத்தராகவும் என்னைப் போன்று இன்பவதி அவர்களும் உறுப்பினராகவும் இருப்பதனால் அக் குறைகளை கதைக்க வேண்டும் என்று நினைக்கின்றேன். வைத்திய அத்தியட்சகர் என்னிடம் சில குறைகளை கூறினார். அதை நான் கேட்ட போது எம்மால் செய்ய முடியாது என்று கூறினீர்கள். நான் அதை உள்வாங்கினேன். வைத்தியசாலைக்கு பின் பக்கம் இருக்கின்ற பாதை காடுகள் நிறைந்து காணப்பட்டிருப்பதால் அப் பிரதேசத்தில் இருக்கும் காணிச் சொந்தக்காரர்களுக்கு அழைப்பானை விடுத்து அதை சுத்தப்படுத்தப்பட வேண்டும். அப் பகுதியில் இருக்கும் வயல்களை அறுவடை செய்து விட்டார்கள். தற்போது யானைப்பிரச்சினை அதிகரிக்கும். அப் பாதைகளுக்கு மின் விளக்குகள் பொருத்துவதற்கு கௌரவ தவிசாளர் அவர்களின் அனுமதியினை கேட்டுக் கொள்கின்றேன்.

திண்மக் கழிவு அகற்றும் தொட்டிகள் வழங்குவதாக கூறினீர்கள். இத் தொட்டிகளில் சிலவற்றை வைத்தியசாலைக்கும் கொடுத்து வைத்தியசாலையின் வெளிப்புறத்தில் வைப்பதற்கு உதவி செய்ய வேண்டும் அத்துடன் கிழமைக்கு ஒரு தரமாவது முன்பகுதி பாதையை சுத்திகரிக்கும் தொழிலாளர் ஊடாக சுத்தப்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கின்றேன். அபிவிருத்தி, சூழல் பாதுகாப்பு தொடர்பாக எவ்வித நடவடிக்கைகளாக இருந்தாலும் வைத்திய அத்தியட்சகருக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். சுதந்திர தினத்திற்காக மர நடுகை செய்யப் போகின்றோம் என்று தெரிந்து அவர் என்னிடம் சில மரக் கன்றுகளை கேட்டார். நான் செயலாளரின் அனுமதியுடன் எடுத்து

சென்றேன். அவர் கௌரவமாக வரவேற்று அதில் இருந்து நல்ல ஒரு விடயத்தை கூறினார். அதாவது ஒவ்வொரு உத்தியோகத்தர்கள் அனைவரும் அவருடைய பிறந்த தின நாளில் ஒவ்வொரு மரக் கன்றை நட வேண்டும் என்பதை உள்வாங்கினார். நான் எனது காலத்தில் இருந்து இவ்வாறான வைத்திய அத்தியட்சகரை காணவில்லை.

திண்மக் கழிவு அகற்றும் ஊழியர்களுக்கு எமது சபையால் கையுறை வழங்கப்படுகின்றது. நான் வேலை செய்கின்ற விடுதிக்கு பக்கத்தில்தான் அவர்களது கழிவகற்றல் இடம் இருக்கின்றது. அவ் விடுதியில் வந்து அங்கே பாவிக்கும் உத்தியோகத்தர்களின் கையுறைகளை கேட்கின்றார்கள். எனக்கு அவ் இடம் இழிவாக இருக்கின்றது. அவ் விடுதி அவசர சிகிச்சை செய்கின்ற இடம் அங்கு வேலை செய்து கொண்டிருக்கும் ஊழியர் அவ் வேலையை விட்டு வந்து கையுறை கொடுக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது. சபையால் கொடுக்கின்ற கையுறையை பாவிக்க வேண்டும் என்று அவர்களிடம் வன்மையாக கூற வேண்டும். நான் அவர்களிடம் பல தடவை கூறியும் அவர்கள் கேட்பதாக இல்லை. Surgical கையுறை மிக மெல்லியது. ஏதாவது தவறுதலாக விடப்பட்டிருந்த ஊசிகள் இருந்தால் அது அவர்களுக்கு பக்க விளைவை ஏற்படுத்தும்.

எமது வைத்திய அத்தியட்சகர் வைத்தியசாலையில் உள்ள திண்மக் கழிவுகள் எல்லாவற்றையும் சேதனப் பசளையாக செய்வதற்குரிய உதவிகளை எம்மால் செய்ய முடியுமா என்று கேட்டார். நான் அதற்கு சபையூடாக தவிசாளர் அவர்களிடம் கதைத்துவிட்டு சொல்கின்றேன் என்று கூறினேன். அவர் உண்மையிலே எவ்விடயத்தையும் தாழ்வாகத்தான் கேட்டுக் கொள்வார். எமது வைத்தியசாலையில் இருக்கும் ஒரு சில உத்தியோகத்தரால் மட்டும் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் சில பிரச்சினைகள் ஏற்படுகின்றதே தவிர இவ் வைத்திய அத்தியட்சகர் இல்லை. அதைப் பற்றியும் கவனம் எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர்களிடம் மீண்டும் தாழ்மையாக கேட்டுக் கொள்வது சபைக்கு பொருத்தமான சபையினால் செய்யக்கூடிய விடயங்களை மட்டும் சபையில் கதைக்க வேண்டும் என்றும் சுருக்கமாகவும் கூற வேண்டும். பொதுச் சுகாதாரத்திற்கு நாமும் பங்காளிகள். ஆனால் பொதுச் சுகாதாரத்திற்கு சம்மாந்துறை பிரதேச சபையும், MOH அலுவலகமும் தொடர்பு கொள்ளவேண்டும். வைத்தியசாலையில் இருந்து அகற்ற வேண்டியது Food Waste, Plastic Paper தவிர Surgical Waste இல்லை. ஏன் அங்கு வருகின்றார்கள் என்று எனக்கு தெரியாது. Food Waste அவ்விடத்தில் Compost செய்வதற்கு நாம் உதவி செய்ய வேண்டும். அதன் தொழில்நுட்பத்தை அவர்களுக்கு கொடுத்து அதற்குள்ளே Compost செய்வதற்கு சபையால் செய்ய வேண்டியவைகளை செய்யலாம்.

**கௌரவ உப தவிசாளர் வீ. ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உறுப்பினர் சிஹாமா, கௌரவ உறுப்பினர் சரிபா அவர்கள் கூறியது போல் எமக்கு வருமானத்தை பெற்றுத்தரக் கூடிய சந்தர்ப்பம் இருக்கின்றது. அதாவது சம்மாந்துறை வைத்தியசாலையின் முன்னால் துவிச்சக்கர வண்டி நிறுத்துவதற்கு ஒரு முறையான நிறுத்தும் இடம் இல்லை. அதுமாத்திரமல்லாமல் அவ் வண்டிகளை பராமரிப்பதற்கு வைத்தியசாலையால் ஒரு காவலாளியை நியமித்து இருக்கின்றார்கள். அவர் விரும்பிய தொகையை அறவிடுகின்றார். ஆனால் பராமரிக்கப்படுவதில்லை. அதற்கான ஒரு Stand ஐ சபையின் ஊடாக அமைத்து RDA இன் அனுமதி பெற்று Tender வழங்கினோமானால் ஒரு குறிப்பிட்ட பணத்தை பெற்றுக் கொள்ளலாம் என்பது எனது கருத்து ஆகும்.

03 Bus Halt அமைப்பது தொடர்பாக ஒரு கோரிக்கை வைத்திருந்தேன். மல்வத்தை சந்தியில் கல்முனையை நோக்கி வரும் இடத்திலே Bus Halt ஒன்று இருந்தது. அது வீதி அபிவிருத்தி செயற்பாட்டின் ஊடாக அது முற்றாக உடைக்கப்பட்டுள்ளது. முதலாம் கட்டமாக அதனை செய்வதற்கான ஒழுங்கினை செய்து தருமாறு கேட்டுக் கொள்கின்றேன். இதற்கு மேலதிகமாக

அண்மையில் இஸ்மாயில்புர கிராமத்திலே சிரமதானத்தை மேற்கொண்டோம். அச் சிரமதானத்தின் போது மிக வேதனையான நிகழ்வினை கண்டோம். அதாவது அங்கு ஒரு சிறுவர் பூங்கா இருக்கின்றது. ஆனால் அங்கு ஊஞ்சல் பிரேம் இருக்கின்றது அதற்கான சங்கிலிகள் இல்லை. Sea Saw இல் பிரேம் இருக்கின்றது அதற்கான கதிரை இல்லை. ஏறக்குறைய ஒரு இலட்சத்திற்கு இடைப்பட்ட நிதி போதுமானதாக இருக்கும் என்று நினைக்கின்றேன். எனவே எதிரவரும் காலங்களில் அதனையும் சீர் செய்து தர வேண்டும் என்று இச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எஸ். நிலுவ்பா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சம்மாந்துறையில் அல் மர்ஜான் மகளிர் கல்லூரி பிரதான வீதியில் அமைந்துள்ளது. அப் பாடசாலையின் முன் உள்ள வடிகான்கள் மூடி இடப்படாமல் மிகவும் பாதுகாப்பு இல்லாத நிலையில் காணப்படுகின்றது. ஏனென்றால் அதன் இரு பக்கங்களிலும் புற்கள் வளர்ந்து குப்பைகளும் போடுபட்டு வருகின்றது. அப் பாடசாலையில் பெண்கள் மாத்திரம் படிக்கின்றார்கள். அவர்கள் அவ் வீதியை துப்பரவு செய்வதற்கு கஸ்டமாக இருக்கின்றது. அவ் இடத்தில் கொழும்புக்கு செல்லும் பஸ்களும் நிற்கின்றது. சிறு பிள்ளைகள் தவறி விழுவதற்கும் சந்தர்ப்பம் ஏற்படும். மேலும் எமது மார்க்கட்டில் மீன் விற்பதற்கு என்று இடம் இருக்கின்றது. ஆனால் அவர்கள் அரபா பாடசாலை வீதியில் மீன் விற்பதால் பெண்கள் அதனால் பயணம் செய்வது கடினமாக இருக்கின்றது. பிரதேச சபைக்கு முன் உள்ள வீதியிலும் மீன் விற்கப்படுகின்றது. எனவே இதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
வடிகான்கள் சுத்தப்படுத்த வேண்டும் என்பதில் பிரச்சினை இல்லை. ஆனால் வடிகான்கள் முழுமையாக மூட இயலாது. அது RDA இற்குரியது. அதனை முழுமையாக மூடினால் சுத்தம் செய்ய இயலாது. ஒரு பாடசாலை என்றால் பாடசாலை முன்னுக்கும் பொறுப்பு எடுக்க வேண்டும். எல்லாவற்றையும் சபைதான் செய்ய வேண்டும் என்றால் அதை செய்ய இயலாது. நாமும் உதவி செய்யலாம் ஆனால் அவர்களும் பங்களிப்பு செய்ய வேண்டும். பாடசாலைகளில் பெற்றோர்களை மாதத்திற்கு ஒரு தடவை அழைத்து இப் பணிகளை செய்ய வேண்டும்.

**கௌரவ உப தவிசாளர் வீ. ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கடந்த 2018.02.10 ஆந் திகதி தேர்தலின் பின்னர் நாம் கௌரவ உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டு பின்னர் 3ம் மாதம் 10 ஆந் திகதி தவிசாளர் மற்றும் உப தவிசாளராக தெரிவு செய்யப்பட்டோம். அதன் அடிப்படையில் எமது கட்சி ஒரு தீர்மானத்தை மேற்கொண்டது. அதாவது உப தவிசாளர் பதவியினை எமது ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி 4 உறுப்பினர்களுக்கும் வருடத்திற்கு ஒருவர் என்ற அடிப்படையில் வழங்குவதாக தீர்மானிக்கப்பட்டது. அவ் அடிப்படையில் முதலாம் வருடம் எனக்கும் அதனைத் தொடர்ந்து ஏனைய உறுப்பினர்களுக்கும் ஒவ்வொரு வருடமாக வழங்கப்பட்டது. எமது சக உறுப்பினர் வளர்மதி அவர்கள் தனது வருட காலத்தையும் சேர்த்துக் கொண்டு 2 வருடங்கள் உப தவிசாளர் பதவியை வகிப்பதற்கு எனக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. அவ் அடிப்படையில் இன்று 2 வருடங்கள் முடிவடைந்து விட்டது. எமது கட்சி தீர்மானத்தின் பிரகாரமும் உப தவிசாளர் பதவியை நாளைய திகதியில் இருந்து எமது சக உறுப்பினரான திரு அச்சி முஹம்மட் அவர்களுக்கு வழங்குவதற்காக நான் எனது உப தவிசாளர் பதவியில் இருந்து இராஜனாமா கடிதத்தினை தற்பொழுது வழங்குகின்றேன்.

கடந்த 2 வருட காலங்களிலும் எமது சபையின் கௌரவ தவிசாளர் அவர்களும் செயலாளர் அவர்களும் வழங்கிய ஒத்துழைப்புக்கும் இச் சந்தர்ப்பத்திலே நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன். இன்று நான் வழங்கிய இராஜனாமா கடிதம் உள்ளூராட்சி ஆணையாளருக்கு அனுப்பப்பட்டு அவரிடம் இருந்து மீள எனக்கு இது உண்மையாக வழங்கப்பட்ட கடிதமா என்று உறுதிப்படுத்தப்பட்டு வரும். அதற்கு நான் பதிலளிக்க வேண்டும். அதன் பின்னர் சபை தெரிவு

ஒன்று இடம்பெறும். அத் தெரிவிலே அன்று நீங்கள் எவ்வாறு ஒத்துழைப்பு வழங்கினீர்களோ அதை விட அதிகமாக எல்லா கட்சிகளும் ஒத்துழைப்பு வழங்கி அவரை அடுத்து வரும் காலப்பகுதிக்கு உப தவிசாளராக தெரிவு செய்ய வேண்டும் என்று வேண்டிக் கொண்டு எனது இராஜனாமா கடிதத்தை இச் சந்தர்ப்பத்தில் கௌரவ தவிசாளர் அவர்களுக்கு உங்கள் முன் வழங்குகின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கட்சிகளுக்கு இடையில் எடுக்கப்பட்ட தீர்மானப்படி தன் கடமையை சரிவர நிறைவேற்றிய உப தவிசாளர் ஜெயச்சந்திரன் அவர்களை வாழ்த்தியவனாக, நான் அவரின் சேவையைப் பற்றி இப்போது பேசாமல் உத்தியோக பூர்வமாக இன்னுமொரு உப தவிசாளர் நியமிக்கப்படுகின்றாரோ அன்று பேசுவேன். தற்பொழுது இக் கடிதத்தை ஏற்று உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். செயலாளர் உத்தியோக பூர்வமாக உள்ளூராட்சி ஆணையாளருக்கு அறிவித்தல் கொடுப்பார். உள்ளூராட்சி ஆணையாளர் உள்ளூராட்சி தேர்தல் சட்டத்தின் 2012ம் ஆண்டின் 21வது திருத்தத்தின் சர்த்துப்படி அவர் அதற்குரிய நடவடிக்கைகளை எடுத்துவிட்டு அவர் இச் சபைக்கு வந்து என்னோடு இருந்து இரண்டாவது தெரிவை அடுத்த அமர்வில் அது நடப்பதற்கு சாத்தியக்கூறுகள் இருக்கின்றது. அவ் ஒற்றுமையை நாம் மீண்டும் தொடர வேண்டும் என்று கூறிக்கொள்வதுடன்,

கௌரவ உறுப்பினர் அஸ்பர், கௌரவ உறுப்பினர் மாஹிர் அவர்கள் இன்றைய சபை அமர்விற்கு வருகை தர முடியாதென்று அறிவித்தல் விடுத்திருக்கின்றார்கள். அவர்களுக்கு விடுமுறை வழங்க சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.நளீம் |

சபையின் அமர்வினை இனிதே முடித்துக் கொள்கின்றேன்.

செயலாளர்
சம்மாந்துறை பிரதேச சபை.

AM.முஹம்மட் நௌசாட்
தவிசாளர்
சம்மாந்துறை பிரதேச சபை.

*2020.02.11 Sammanthurai  Pradeshiya Sabha -04/24*

***2020.02.11 Sammanthurai Pradeshiya Sabha -04/24***